# திருக்குறள்

# சான்றாண்மை விளக்கம்

*

"அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ
டைந்துசால் பூன்றிய தூண்"

*

ம ம அ

அருட்கலைக் கழகம்,
~~7/27, கோகலே வீதி~~, தவத்திரு அந்தரசுவாமிகள் நந்தவனம்
~~சீனிவாசபுரம்~~, - கோவை—10,
பேரூர்

## பொருளடக்கம்


| எண். | | தலைப்பு. | | பக்கம் |
|---|---|---|---|---|
| 1 | ... | பதிப்புரை | ... | 3 |
| 2 | ... | முன்னுரை | ... | 4 |
| 3 | ... | திருக்குறள் என்னும் பெயர்க்காரணம் | ... | 5 |
| 4 | ... | திருக்குறள்—அன்புடைமை | ... | 9 |
| 5 | ... | ஒப்புரவறிதல் | ... | 12 |
| 6 | ... | வாய்மை | ... | 16 |
| 7 | ... | கண்ணோட்டம் | ... | 20 |
| 8 | ... | சான்றாண்மை | ... | 24 |
| 9 | ... | நாணுடைமை | ... | 27 |
| 10 | ... | பரிமேலழகர் உரைநலம் வியந்தல் | ... | 31 |

அருட்கலைக்கழக வெளியீடு:- உ

# திருக்குறள்

★

# "சான்றாண்மை விளக்கம்"

அன்புடைமை, ஒப்புரவறிதல்,

வாய்மை, கண்ணோட்டம்,

சான்றாண்மை, நாணுடைமை

என்ற ஆறு அதிகாரங்களும்


**டாக்டர் ந. சி. திருநாவுக்கரசு,**
(தமிழ்ப் பேராசிரியர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்)
3, இரண்டாவது நெடுஞ்சாலை


**"பரிமேலழகர் உரைநலம் வியத்தல்"**


சென்னை-85.
புலவர்

**ப. சு. மணியம்**


★


வெளியிடுவோர் :

## அருட்கலைக் கழகம்

கோவை

**6—3—1955.**

ஓம்

# அருட்கலைக் கழகம்

"அன்பும் அருளும் இரக்கமும் ஓங்குக
இன்பமும் மகிழ்ச்சியும் எங்கும் தங்குக"

**நோக்கம் :—**

1. கடவுள் நம்பிக்கையுடையரா யிருத்தல்.
2. கல்வி கற்று அதனாலாய அறிவு நிரம்பல்.
3. தமிழ்ப்பணி புரிதல்.
4. அறிவுத்துணை கொண்டு ஒழுக்கம் பேணல்.
5. ஒழுக்கம் பேணிப் புலால் உணவு தவிர்ந்து அன்பு வளர்த்து அருள்நெறி நிற்றல்.
6. பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும் செம்பொருள்காணும் மெய்யுணர்வின ராதல்.

**கடமை ஆற்றும் நெறி :—**

1. ஒருநாள் ஒருபொழுதேனும் இயைந்தவாறு இறைவனை நினைத்தல்.
2. சமயநூல் ஒன்றும் சிறந்த இலக்கியநூல் ஒன்றும் சேர்த்துச் சேர்ந்து பயிலுதல்.
3. மக்களிடை அறவுணர்வினை ஒல்லும் வகையாற் பரப்புதல்.

இறைவன் அருளும் சான்றோர் துணையும் பற்றிநின்று தொண்டாற்றும் நினைவினேம்.

(பிற செய்திகளை அறிய விரும்புவோர் நேரிலோ, கடித மூலமோ அறிந்து கொள்ளலாம்.)

*தோற்றம்:— 24—10—1949.*

7/27. கோகலே வீதி,
சீனிவாசபுரம்,
கோவை.

இங்ஙனம்,
அருட்கலைக் கழகத்தார்.

*இஃது அருட்கலைக் கழகத்தின் ஐந்தாம் ஆண்டு நிறைவு விழா வெளியீடு.*

ஓம்
''அன்பும் அருளும் இரக்கமும் ஓங்குக
இன்பமும் மகிழ்ச்சியும் எங்கும் தங்குக''

# பதிப்புரை

**கல்**தோன்றி மண்தோன்றாக் காலத்து ஞாலத்தே முன்தோன்றிய முதுமைக் குடியினராய தமிழ்மக்கட்குத் தாய்மொழி தீந்தமிழே. அம்மொழி காலவரம்பிட்டுக் காட்டலாகாத் தொன்மையும், அறிவான் அளந்துகாண லாகா இலக்கணச் செப்பமும், உணர்வாற் றுய்த்து நிரம்பலாகா இலக்கிய வளமும் ஆன்று, பயில்வா ருடலும் உயிரும் உளமும் உருக இனித்துநிற்கும் இயல்பினது. அதன்கண் அமைந்துள்ள எழுத்தோவியமாய **திருக்குறட்** செழுமறை தெய்வப் புலவர் **திருவள்ளுவர்**தம் கருத்தோவியம்; அஃதே அவர்தம் உயிரோவியம்; அதுவே தமிழர்தம் உண்மைவாழ்க்கை ஓவியம். ''தீதற்றோர் உள்ளுதோ றுள்ளுதோ றுள்ளம் உருக்குமே'', ''தேவர் திருவள் ளுவர் தாமும் செப்பியவே செய்வார் பொருவில் ஒழுக்கம் பூண்டார்'' என்னும் வள்ளுவமாலைப் பொன்மொழிகள், குறள்சேர்ந்து பயில்வாருளத்துச் சார்ந்து நிற்றல் நன்று.

நம் தீந்தமிழ்த் தெய்வ மாமறை, வாழ்வு நூலாகாது வறிய வாய் மொழிநூலாகவே தமிழ்மக்கள் சொல்லிலும்'எழுத்திலும் பெரிதும் கழிதல் கண்டு கவன்று, குறள்வழியே ஒல்லும்வகையாற் பெரிதும் வாழமுயன்றும், வாழ்ந்தும் வருகின்ற எம் கழகம் வெளியிட்ட''**சான்றாண்மை விளக்கம்**'' என்னும் இச் சிறுநூல், மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாக் குணநலம் தெரிக்கும் **''அன்புடைமை, ஒப்புரவறிதல், வாய்மை, கண்ணோட் டம், சான்றாண்மை, நாணுடைமை''** என்னும் ஆறதிகாரங்களைப் **பரிமேலழகியார்** உரையுடன் நடுவும், தமிழகத் தனித் தவமகன், அறிவுக் கடல், **மறைமலை அடிகளார்** அவர்கள் ஆய்ந்து எழுதிய **''திருக்குறட் பெயர்க் காரணம்''** என்னும் கட்டுரையை முதலும், அவரடியை ஒற்றிச் செல்லும் எம்கழகச் செல்வர், புலவர், ப. **சுப்பிரமணியம்** அவர்கள் (தமிழ் விரிவுரையாளர் அரசியலார் கலைக் கல்லூரி) எழுதிய **''பரிமேலழகர் உரைநலம் வியத்தல்''** என்னும் கட்டுரையை இறுதியிலும் கொண்டு விளங்குகின்றது. இது தமிழ் மக்கட்குக் குறள்பயிலும் நடுவுநிலை பிறழா அறிவூக்கமும் வாழ்க்கை நெறிச் செல்லும் அறத்துறை ஆக்கமும் சிறிது ஊட்டுமேல் அதுவே போதப் பயனும் என்னும் கருத்துடையேம்.

இதற்கு ஓர் இனிய முன்னுரை ஈந்த எம்கழகக் காப்புத் தந்தை, முதுபெரும்புலவர், ஆசிரியர், ச. ***அய்யாசாமி பிள்ளை*** அவர்கட்கும், முன் பின் கட்டுரைகளைத் தந்த பெருமக்கட்கும், இதனைத் திருந்திய வகையால், விழைந்த முறையில், உரியகாலத்து அச்சு ஏற்றிக் கொடுத்த, கோவை, **கலைக்கதிர் அச்சகத்தாருக்கும்** எங்கள் உளமார்ந்த நன்றி உரிய. எம்மைக் கழகக் கொள்கையில் நிலைக்கச்செய்து தோன்றாத் துணையாய் அகத்தும் புறத்தும் உடனிருந்து ஆற்றுப்படுத்தி என்றும் உதவிவரும் எல்லாம்வல்ல இறைவனருளை எண்ணி எண்ணியுருகி வாழ்த்தி வணங்கு கின்றோம். **அருட்கலை வளர்க! அருந்தமிழ் வாழ்க!!**

*6—3—1955,* —— ***அருட்கலைக் கழகத்தார்.***

# முன்னுரை

**கோ**வை அருட்கலைக் கழக இரண்டாம் வெளியீடாக வருகின்றது **சான்ருண்மை விளக்கம்** என்னும் இச் சிறுநூல். அன்பர்கள் அதனை நன்கு சுவைப்பாராக. இவ் வெளியீட்டில் மூன்று பகுதிகள் உள்ளன. திருக்குறளினின்றும் ஆறு அதிகாரங்களும் அவற்றின் உரை நுட்பங்களும் ஒரு பகுதியுள் உள்ளன. சான்ருண்மை என்னும் அதிகாரத்தில் வரும்,

*''அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ*
*டைந்துசால் பூன்றிய தூண்''*

என்னும் அருமைக் குறட்பாவில் குறிபெறும் ஐந்து நெறிகளை விளக்கி நிற்கும் ஐந்து அதிகாரங்களும், சான்ருண்மை என்னும் ஒன்றும் இடம் பெற்றுள்ளன. கூடிவாழும் இயல்பினராகிய மக்கள்தொகுதி கலந்து உறவாடி வாழ்தற்கு இன்றியமையாதனவாய இவ் வைந்தையும் வள்ளுவப் பெருந்தகையார் தமது நுண் மாண் நுழைபுலத்தால் உய்த்துணர்ந்து தொகுத்துத் தந்துள்ளார் என்று கருதி இவற்றை வெளியிட் டிருப்பதாகக் கூறலாம். அறம் பல; அவற்றைப் பேணிக் கடைப்பிடிக்கும் நெறி பல; பல்பிணிச் சின்னுள் வயத்தனுகிய மகன் தன் அல்லல் வாழ்க்கையூடு அப் பலவற்றையும் ஒருங்கெண்ணுதல் அரிதெனக் கண்டு இங்ஙனம் எளிமை யில் சிலவாய அறங்களை யூட்டியுள்ளார் போலும்.

மற்றென்று சைவப் பெரியார் மறைமலை யடிகளாரது **திருக்குறள் என்னும் பெயர்க் காரணம்** என்பது. அடிகளார் தென்னுட்டுத் தவப் பயனுகத் தோன்றிய இல்லறத் துறவி. எதையும் ஆராய்ந்தறிந்து சொல்லத் தக்கனவாய்க் கற்போருக்குப் பயன்தருவனவா யுள்ளவற்றை முற்போக்கு முறையில் கூறும் இயல்பினர். இவர்தம் அரிய கருத்துக்களைத் தமிழ் மக்கள் அறிய வேண்டியது கடனுகும்.

இறுதிநிற்பது பரிமேலழகரது உரை வன்மையையும் வளப்பத்தையும் விளக்க வந்த ஓர் அரிய கட்டுரை. இதனை ஆக்கியவர், கோவை, அரசிய லார் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் புலவர் திரு. **ப. சுப்பிரமணியம்** என்பவர்; இவரது நுண்ணிய உரைமுறை தமிழ் உலகுக்குப் புதிய தொன்று. இனிய பயனைத் தருவது. ஒரு நூலைக் கற்கும் நெறி முறையையும் உரை யைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையையும் இச்சீரிய ஆராய்ச்சிக் கட்டுரை உணர்த்த வல்லது. கருத்தூன்றிக் கற்பவருக்கு இதன் பெருமை இனிது புலப்படும்.

கழகமெனின் அதன் உறுப்பினரே யன்றிப் பிறரும் நல்ல பயனடைய நடைபெறுதல் வேண்டும். கழகத்தின் மாண்பு அஃது. பண்டைத் தமிழ்க் கழகங்கள் இத்தகைய குறிக்கோளைக் கொண்டு நூலாய்ந்தன; நூற் பொருள் கண்டன; கண்டனவற்றை விண்டன. மேலை நாட்டுக் கழகங்கள் அறிவுத் துறையில் செய்துவரும் அரும்பணிகள் ஏடு கொள்ளாதன. அருட் கலைக் கழகமும் அந்த முறையில் பணியாற்ற முன்வந்தது போற்றற் குரியது.

அருட்கலைக் கழகம் வாழ்க. * அருமைத் தமிழ் வாழ்க.

தமிழ்ப் பெரும்புலவர்,
ஆசிரியர் ச. அய்யாசாமி பிள்ளை அவர்கள்.
கோவை.

ஓம்.

திருச்சிற்றம்பலம்.

# *திருக்குறள் என்னும் பெயர்க் காரணம்

தமிழ் மொழியில் மிகச் சுருங்கிய வெண்பா யாப்பிற்குக் **குறள்** என்று பெயர். இஃது எழுசீரான் வந்த இரண்டு அடி உடையது. எழுசீரான் வருங் குறள் வெண்பாவினை ஆசிரியர் தொல்காப்பியனார் குறுவெண் பாட்டு என்பர். தமிழில் இதனினுஞ் சிறிய யாப்புக் காணப்படுவதில்லை. தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் தங்கருத்தினை விளக்குதற்கு மிகச் சுருங்கிய இவ்வெண்பா யாப்பினைத் தெரிந்தெடுத்தவாறென்னை யெனின்:— மக்கள் உயிருக்கு இன்றியமையாது வேண்டப்படும் உறுதிப் பொருளைத் தங் கூரிய அறிவினால் நன்கு ஆராய்ந்து, அவைதம்மை அவர் அறிவிற் பதியச் சுருக்க வகையான் விளக்குதற் பொருட்டு ஆசிரியர் இதனையே எடுத்துக் கொள்வாராயினர். நுண்ணிய பொருள் ஒன்றை ஒருவற்கு விளக்கலுறின், அதனைக் கேட்போன் உணர்வு சலியா வண்ணம் நன்கெடுத்துப் புகட்டுதல் வேண்டும். அவ்வாறின்றிக் கேட்போனுணர்வு இளைப்புற்று ஒழிய வாளாது விரித்துச் சொல்லப்படுமாயின் அப்பொருள் எத்துணை நுண்ணியதாயினும் அஃது அவன் உள்ளத்தின்கண் அழுந்தமாட்டாதாய்ப் போம். மக்களுயிர்க்கு வேண்டப்படும் பொருட்டுறைகளெல்லாம் விரித்துரைப்பேம் எனப் புகுந்த வடமொழி மிருதி நூல்கள் வரம்பின்றி விரிந்தமையாற்றான் பயன்படுதலின்றி வழக்கு வீழ்ந்து ஒழிந்தன. உயிர்க்கு உறுதிப்பொருள் நாடி அவற்றையெல்லாந் தொகுத்து உரைக்க ஒருப்பட்ட திருவள்ளுவனார் இந்நுண்மை இனிதறிந்து தாம் கருதியவாறே தெரித்தற்குச் சிறந்த கருவியாக இக்குறள் வெண்பாவினால் நூல் இயற்றுவாராயிற்று.

ஒருவன் அறிவை மயக்கி அவனைத் தன்வயப்படுத்தலும், ஒருவற்கு ஒரு பொருளின் உண்மைத்தன்மை காட்டி அவனறிவை நன்கு விளக்கி அவனைத் தன்வயப் படுத்தலும் என நூல்களால் கொள்ளப்படும் முறை இரு வகைத்தாம். இதனை ஓர் உதாரணத்தின்கண் வைத்துக் காட்டுதும். ஒரு பெண், பொற்பூ இடைமிடைந்து பொற்சரிகை விளிம்புசோத்து மிளிரும் நீலப்பட்டாடை நலம்பெற உடுத்து, நிறந்தெரிந்த முதுமணிகள் அழுததி நறிதுமுற்றிய நல்லணிகலன் அணிந்து, புழுகுநெய்யுங் கத்தூரியும் விரைகமழ நறுங்கூந்தலில் உரைத்து, உறுப்புத் திருத்தி உல்லாசங் காட்டி உவகைதரற்கு உரிய சிலவுரை வரையறுத்து மொழிந்து ஓர் ஆண்மகனைத் தன்வயப் படுத்தல் போல்வது முதலிற் கூறிய முறை. இரண்டாவது முறையோ அங்ஙனமின்றி, இயற்கையழகு வாய்ப்பப் பெற்றாள் ஒருதிருமகள் செயற்கைநலம் பெருளாய்க் கருகி நீண்ட விரிகுழற்கற்றையும், சேலெனப் பிறழும் பெருமதர் விழியும், முல்லைமொக்குள் போன்ற மெல்லிய

---

* செந்தமிழ் வெளியீடு.

மூக்கும், கொவ்வைப் பழத்தைப் பழித்த செவ்விய இதழும், யானை மருப்பிற் பொலியும் இசைந்த எயிறும், கடைந் துருட்டியதுபோலும் பச்சிளந் தோளும், பூங்கொம்புபோல் ஒசிவும் உடையளாய்க் கள்ள நோக்கமின்றி உள்ளஞ் செவ்வியளாய்க் கிளியென மிழற்றி மயிலென உலவித் தன்மாட்டு முதிர்ந்த அன்புடைய காதலன்பாற் றானும் உள்ளம் உருகி ஒருமித்து அவனைத் தன்பாற் படுத்தல் போல்வதாம். இவ்வாறு இருதிறப்பட்ட நூன் முறையுள் ஓர் உண்மையைப் பலவகையான் அலங்கரித்து விரித்துக் கூறும் நெறி மந்தவதிகாரிகள் பொருட்டும், ஓர் உண்மைப் பொருளைக் கிடந்த வாறே எடுத்துச் செவ்விதின் விளக்கி அறிவு கொளுத்து நெறி அதிதீவிர அதிகாரிகள் பொருட்டும் நூல்களான் மேற்கொள்ளப் பட்டன. இவ்விரண் டினுள்ளும் பிற்கூறிய நெறியே சிறப்புடைத்தாதல் எல்லார்க்குந் தெற்றென விளங்கும்.

ஈண்டுத் தெய்வப்புலமைத் திருவள்ளுவனார் மக்களுயிர்க்கு உறுதிப் பொருளாவனவற்றைத் தொகுத்தெடுத்து, மற்று அவை தம்மைப் பல வகையான் அலங்கரித்துக் கூறுதற்கு இசையாராய், உண்மைத் தன்மை உள்ளவாறே புலப்படத் தெளித்துக் கூறுகின்றாராகலின் இந்நூல் நுண் ணறிவு விளங்கப் பெறுதலுடைய அதிதீவிர மாணுக்கரை நோக்கி எழுந்த தென்றுணர்க. இவ்வதிதீவிர வதிகாரிகள் நல்லறிவிற்குப் பொருந்தச் சுருங்கத் தெரித்தல் வல்ல யாப்புக் குறுவெண்பாட்டையன்றிப் பிறி தொன்று காணப் படாமையின், இதுவே இந்நூலுக்கு இணங்கிய கருவி யாயிற்று என்க. மற்றைப் பாவிலும் பாவினங்களிலும் இங்ஙனம் ஓர் உண்மைப் பொருளைச் சொற்சுருங்க ஓதி அவ்வுண்மை மாத்திரம் புலப்படுத் தல் ஒருவாற்றானும் முடியாமை காண்க. இது தெரிதற்பொருட்டு இந் நூலின்கண் ஒரு செய்யுளை நாலடியார்ச் செய்யுளொன்றோடு ஒப்பவைத்து விளக்கிக் காட்டுவாம். அறிவுடையார் நட்பு நாடோறும் பெருகுதலும், அறிவிலார் நட்பு முன்கொண்ட அளவிற் றேய்ந்து வருதலும் உணர்த்து தற்கு ஆசிரியர்,

*"நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்*
*பின்னீர பேதையார் நட்பு"*

என்று கூறியருளினார். இதன் பொருள்:— 'நீரவர் கேண்மை பிறை நிறை நீர' எனவும், 'பேதையார் நட்பு மதிப்பின் நீர' எனவும் பிரித்து இயைத்து "அறிவுடையார் கேண்மை முன்கொண்ட அளவிற்றன்றிப் பிறைநாடோறுங் கலைவளர்தல்போல வளரும் இயற்கைத்தாம்; அறிவில்லார் கேண்மை அவர் அது கொள்ளுங் காலத்துப் பெரிதாய்ப் பின்நாட்க்ளில் கலைமுற்றிய மதியந் தேய்ந்து அறுதல்போலத் தேய்ந் தொழியும் தன்மைத் தாம்" என்க. 'பிறை' நேயம் வளர்தலை உணர்த்துதற்கும் 'மதி' அது தேய்தலை உணர்த்து தற்கும் உவமைகளாக எழுந்தன. 'பிறை' 'மதி' என்னுஞ் சொற்களானே

ஆசிரியர் கருதிய பொருள் இனிது விளங்குமாகவும், 'நிறை' என்னும் ஒரு சொல் வேண்டா கூறலாமெனின்;— 'மதிப்பின் குறைநீர' எனப் பின்னுள்ள வாக்கியப் பொருள் நிரம்புதற்கு வருவிக்கப் படுங் குறை என்னுஞ் சொல் அதனுற் பெறப்படுதலானும், உவமான உவமேயங்களுக்குள்ள பொதுத் தன்மையினை விளக்குதற்கு அச்சொல் இன்றியமையாது வேண்டப்படுத லானும் அது வேண்டா கூறலாவது யாங்ஙனமென மறுக்க. 'நிறை' என்னும் அச்சொல் இல்வழியும் 'பிறை' 'மதி' என்பவற்றுல் 'நிறை' 'குறை' என்னுஞ் சொற்கள் உய்த்துணர்ந்து வருவிக்கப்படு மாகலின், அதுவேண்டா கூறலேயாம் பிறவெனின்;—அறியாது கடாயினுய்: வாக்கியப் பொருட்கு உபகாரப்படும் யாதாயினும் ஒருசொல் நின்று மற்றென்றனை வருவிப்பதன்றி இரண்டுமின்றியே அவை வருவிக்கப்படு மென்றல் பொருந்தாத கூற்றும். அற்றன்று: 'பிறை' 'மதி' என்பவற்றுல் அவை உய்த்துணரப் படுதல் ஒருதலையாகலின் அச்சொல் நின்று பயமின்றே யெனின்;— முழுவதும் வருவிக்கற் பாலதனை உய்த்துக்கொண் டுணர்தல் ஒரு சொல் இல்வழியே யன்றி உள்வழிப் பொருந்தாதெனச் சேனுவரையரும் உரைத்தா ராகலின், அங்ஙனங் கடாவுதல் போலியாமென மறுக்க. இதுகிடக்க. இனி இச் செய்யுட் பொருளையே விளக்க நாலடியாரில்,

*"பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்*
*வரிசை வரிசையா நந்தும் — வரிசையால்*
*வானூர் மதியம்போல் வைகலுந் தேயுமே*
*தானே சிறியார் தொடர்பு"*

என்றெரு செய்யுள் வருகின்றது. இச்செய்யுளின்கட் 'பெரியவர் கேண்மை' என்பது மேலைத் திருக்குறளில் 'நீரவர் கேண்மை' என்பதிலும், 'பிறை போல நாளும் வரிசை வரிசையா நந்தும்' என்பது 'பிறை நிறை நீர' என்பதிலும், 'சிறியார் தொடர்பு' என்பது 'பேதையார் நட்பு' என்பதிலும், 'வரிசையால் வானூர் மதியம்போல் வைகலுந் தேயுமே' என்பது 'மதிப்பின் நீர' என்பதிலும் அடங்குதல் காண்க. இச்செய்யுளில், போல, நாளும், வரிசை வரிசையா நந்தும், வரிசையால், வானூர், போல், வைகலும், தேயுமே, தானே முதலிய சொற்கள் வேண்டா கூறலாய் நிற்றல் காண்க.அற்றேல் இச் செய்யுள் குற்றம் படுமோ வெனின்:— படாது; என்னை? அச் சொற்களெல்லாம் ஓர் அலங்காரங் குறித்து மந்தவதிகாரிகளுக்கு மகிழ்ச்சிதரு மாதலானும், நுணுகி யறிய வேண்டாது எளிதிலே அவர்க்குப் பொருள் புலப்படுத்தலானு மென்க. 'வானூர் மதியம்' என்பது 'குழவியூர்தலை' நினைப்பித்தலின் அஃது ஓரலங்காரமாயிற்று. இந் நாலடியாரிற் செய்யுள் வாயகன்ற பொன்வள்ளத்தில் நிரப்பிய பனிநீர் போல்வதாம்; மற்று அத் திருக்குறட்பாவோ மாணிக்கச் செப்பினுட் பொதிந்திட்ட கத்தூரி போல்வதாம். மாணிக்கச் செப்பு விலை யேறப் பெறுதலுடன் செய்தமைத்தற்கும் அருமையுடையதாம். பொற்

கின்னம் விலை குறையப் பெறுவதுடன் செய்தமைப்பதற்கும் எளிதில் நெகிழ்தலுடைத்தாம். நாலடியார் செய்யுளியற்கைக்குணஞ் சிறிதாதலுடன் புலவனுற் பாடுதற்கும் எண்மையுடைத்தாம்; திருக்குறள்வெண்பாட்டோ குணம் பெரிதாதலுடன் அமைத்தற்கும் அருமையுடைத் தாம். இனி அப் பொன்வள்ளத்தில் நிறைந்த பனிநீர் திரவவுருவின் விரைந்தழியும் மணமுடைமைபோல, நாலடியாரிற் செய்யுட் பொருளுங் கேட்கும் மந்தவதிகாரிகட்குச் சிலகணங்கள் மாத்திரையே மகிழ்ச்சிபயந்து பின் அவருள்ளத்தே நிலை பேறின்றி ஒழியும்; மாணிக்கச்செப்பினுட் செறித்துவைத்த கத்தூரி கட்டுருவினுல் நிலைபெறக் கமழும் நறுமணமுடைமை போலத் திருக்குறட் பொருளுங் கேட்கும் அதிதீவிர வதிகாரிகட்கு நினைத்தொறும் உரைத்தொறும் மகிழ்ச்சி பயந்து அவருள்ளத்தே ஆழ்ந்து நிலைபெறுவதாமென்க. இதனுல் நாலடியார் முதலான நூல்யாப்புகள் மந்தவதிகாரிகட்கு அறிவுறுத்தும்பொருட்டுப் புனைந்துரையாற் சொற்செறிவு பொருட்செறிவு நெகிழ்ந்து ஒழுகும் முறை பற்றிச் செய்யப்பட்டனவாமென்பதூஉம், திருக்குறள் யாப்பு அதிதீவிர அதிகாரிகள் பொருட்டுச் சொற்சுருக்கமும் பொருட் செறிவும் பொதுள இறுகிய நுண்நிலையாலமைக்கப்படும் நெறிதழுவி வந்ததாமென்பதூஉம் நன்கறியப்படும் என்க. மக்களுயிர்க் குறுதிப்பொருள் விளக்குதலே உள்ளுறையாக்கொண்டு எழுந்த காப்பிய நூல்களும் அலங்கார நெறிபற்றி வந்தனவேயாமென்க. அற்றேல் காப்பிய நூல்களுஞ் சொற்செறிவு பொருட்செறிவு நன்கமைந்து விளங்கக் காண்டுமாகலின், அவையெல்லாம் நெகிழ்ந்தொழுகும் அலங்கார நெறிபற்றி வந்தனவென்றுரைத்தல் பொருந்தாதாம் பிறவெனின்:—நன்று கூறினுய். அக்காப்பிய நூல்கள் தம்மிற்ருழ்ந்தவற்றை நோக்கச் சொற்செறிவு பொருட்செறிவு உடையவெனப்படுமல்லது தம்மில் மிகவுயர்ந்த இத்தெய்வத் திருக்குறள் நூலை நோக்க நெகிழ்ந்த நிலையினவேயாம் என்க.

இங்ஙனம்,
நாகபட்டினம்—வேதாசலம்பிள்ளை,
''ஞானசாகரப்'' பத்திரிகாசிரியர்,
சென்னை கிறிஸ்டியன் காலேஜ் பிரதம தமிழ்ப்பண்டிதர்.

குரோதி ௵,
ஆவணி மீ.

## அதிகாரம் — அ

## அன்புடைமை

[அஃதாவது, அவ்வாழ்க்கைத் துணையும் புதல்வரும் முதலிய தொடர்புடையார்கட் காதலுடையனாதல். அதிகார முறைமையும் இதனானே விளங்கும். இல்லறம் இனிது நடத்தலும் பிற உயிர்கள் மேல் அருள் பிறத்தலும் அன்பின் பயனாகலின், இது வேண்டப்பட்டது. வாழ்க்கைத்துணைமேல் அன்பில்வழி இல்லறமினிது நடவாமை, "அறவோர்க் களித்தலு மந்தணர் ஓம்பலுந், துறவோர்க் கெதிர்தலுந் தொல்லோர் சிறப்பின், விருந்தெதிர்கோடலு மிழந்த வென்னை"* என்பதனானும், அதனால் அருள் பிறத்தல் "அருளென்னும் அன்பீன் குழவி"○ என்பதனானும் அறிக.]

### (க) அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர் புன்கணீர் பூசல் தரும்

(இ—ள்) அன்பிற்கும் அடைக்கும் தாழ் உண்டோ—அன்பிற்கும் பிறரறியாமல் அடைத்துவைக்குந் தாழுளதோ? ஆர்வலர் புன்கணீர் பூசல் தரும்—தம்மால் அன்புசெய்யப் பட்டாரது துன்பங்கண்டுழி அன்புடையார் கண் பொழிகின்ற புல்லிய கண்ணீரே உண்ணின்ற அன்பினை எல்லாரும் அறியத் தூற்றும் ஆதலான்.

உம்மை சிறப்பின்கண் வந்தது. ஆர்வலரது புன்மை, கண்ணீர் மேல் ஏற்றப்பட்டது. காட்சியளவைக் கெய்தாதாயினும் அனுமான அளவையான் வெளிப்படும் என்பதாம். இதனால் அன்பினதுண்மை கூறப்பட்டது.

### (உ) அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு

(இ—ள்) அன்பிலார் எல்லாம் தமக்கு உரியர் — அன்பிலாதார் பிறர்க்குப் பயன்படாமையின் எல்லாப் பொருளானுந் தமக்கே உரியர்; அன்புடையார் என்பும் பிறர்க்கு உரியர் — அன்புடையார் அவற்றானேயன்றித் தம்முடம்பானும் பிறர்க்குரியர்.

ஆனுருபுகளும் பிரிநிலை யேகாரமும் விகாரத்தாற் றொக்கன. 'என்பு' ஆகுபெயர். 'என்புமுரிய' ராதல், "தன்னகம்புக்க குறுநடைப்புறவின், தபுதியஞ்சிச் சீரைபுககோன்"△ முதலாயினார்கட் காண்க.

* சிலப்பதிகாரம், கொலைக்களக்காதை, வரி, எக—எஅ. ○ குறள் எருஎ.
△ புறநானூறு—சஅ.

### (ங) அன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு என்போ டியைந்த தொடர்பு

(இ–ள்) ஆர் உயிர்க்கு என்போடு இயைந்த தொடர்பு — பெறுதற்கரிய மக்களுயிர்க்கு உடம்போடு உண்டாகிய தொடர்ச்சியினை; அன்போடு இயைந்த வழக்கு என்ப—அன்போடு பொருந்துதற்கு வந்த நெறியின் பயன் என்று சொல்லுவர் அறிந்தோர்.

பிறப்பினதநாமை* பிறந்த உயிர்மேல் ஏற்பட்டது. 'இயைந்த' என்பது உபசார வழக்கு. 'வழக்கு' ஆகுபெயர். உடம்போடு இயைந்தல்லது அன்பு செய்யலாகாமையின், அது செய்தற்பொருட்டு இத்தொடர்ச்சி யுளதாயிற்றென்பதாம். ஆகவே, இத்தொடர்ச்சிக்குப் பயன் அன்புடைமை என்றாயிற்று.

### (ச) அன்பீனும் ஆர்வம் உடைமை அதுஈனும் நண்பென்னும் நாடாச் சிறப்பு

(இ–ள்) அன்பு ஆர்வமுடைமை ஈனும்–ஒருவனுக்குத் தொடர்புடையார்மாட்டுச் செய்த அன்பு அத்தன்மையாற் பிறர்மாட்டும் விருப்பமுடைமையைத் தரும்; அது நண்பு என்னும் நாடாச் சிறப்பு ஈனும்—அவ்விருப்பமுடைமைதான் இவற்குப் பகையும் நொதுமலும் இல்லையாய் வரும் நண்பென்று சொல்லப்படும் அளவிறந்த சிறப்பினைத் தரும்.

'உடைமை' உடையனுந்தன்மை. யாவரும் நண்பாதல் எல்லாப் பொருளும் எய்துதற் கேதுவாகலின், அதனை 'நாடாச் சிறப்பு' என்றார்.

### (ரு) அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்து இன்புற்றார் எய்துஞ் சிறப்பு

(இ–ள்) அன்புற்று அமர்ந்த வழக்கு என்ப—அன்புடையராய் இல்லறத்தோடு பொருந்திய நெறியின் பயனென்று சொல்லுவர் அறிந்தோர்; வையகத்து இன்பு உற்றார் எய்தும் சிறப்பு—இவ் வுலகத்து இல்வாழ்க்கைக் கணின்று இன்ப நுகர்ந்து அதன்மேல் துறக்கத்துச் சென்றெய்தும் பேரின்பத்தினை.

'வழக்கு' ஆகுபெயர். இல்வாழ்க்கைக்கணின்று மனைவியோடும் மக்களோடும் ஒக்கலோடுங் கூடி இன்புற்றார் தாம் செய்த வேள்வித் தொழிலால் தேவராய் ஆண்டுமின்புறுவாகலின், 'இன்புற்று ரெய்துஞ் சிறப்பு' என்றார். தவத்தால் துன்புற்றெய்துந் துறக்க இன்பத்தினை ஈண்டுமின்புற்றெய்துதல் அன்பானன்றி இல்லை என்பதாம்.

---

* புல்வரம்பாய பலதுறை பிழைத்துப் பிறத்தல். (திருவாசகம்)

(சு) அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை

(இ—ள்) அன்பு சார்பு அறத்திற்கே என்ப அறியார்—அன்பு துணையாவது அறத்திற்கே என்று சொல்லுவர் சிலரறியார்; மறத்திற்கும் அஃதே துணை—ஏனை மறத்திற்கும் அவ்வன்பே துணையாவது.

ஒருவன் செய்த பகைமை பற்றி, உள்ளத்து மறம் நிகழ்ந்துழி அவனை நட்பாகக் கருதி அவன்மேல் அன்புசெய்ய அது நீங்குமாகலின், மறத்தை நீக்குதற்குந் துணையாம் என்பார், 'மறத்திற்கு மஃதே துணை' என்றார், ''துன்பத்திற்கியாரே துணையாவார்'' *என்புழிப்போல. இவை ஐந்து பாட்டானும் அன்பினது சிறப்புக் கூறப்பட்டது.

(எ) என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம்

(இ—ள்) என்பு இலதனை வெயில்போலக் காயும் — என்பில்லாத உடம்பை வெயில் காய்ந்தாற்போலக் காயும்; அன்பு இலதனை அறம்—அன்பில்லாத உயிரை அறக்கடவுள்.

'என்பில'தென்றதனான் உடம்பென்பதூஉம், 'அன்பில'தென்றதனான் உயிரெனபதூஉம் பெற்றாம். வெறுப்பின்றி எங்கும் ஒரு தன்மைத்தாகிய வெயிலின்முன் என்பில்லது தன்னியல்பாற் சென்று கெடுமாறு போல, அத்தன்மைத்தாகிய அறத்தின்முன் 'அன்பில்லது' தன்னியல்பாற் கெடும் என்பதாம்.○ அதனைக் 'காயு'மென வெயிலறங்களின்மேல் ஏற்றினார், அவற்றிற்கும்△ அவ்வியல்புண்மையின். இவ்வாறு, ''அல்லவை செய்தார்க்கறம் கூற்றம்''● எனப் பிறருங் கூறினார்.

(அ) அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று

(இ—ள்) அகத்து அன்பு இல்லாத உயிர்வாழ்க்கை—மனத்தின்கண் அன்பில்லாத உயிர் இல்லறத்தோடு கூடி வாழ்தல்; வன்பாற்கண் வற்றல் மரம் தளிர்த்தற்று—வன்பாலின்கண் வற்றலாகிய மரம் தளிர்த்தாற்போலும்.

கூடாதென்பதாம். 'வன்பால்' வன்னிலம். 'வற்ற'லென்பது பால் விளங்கா அஃறிணைப் படர்க்கைப் பெயர்.

*குறள்–கூஉகூ. ○கேடு △கெடுக்கும். ●நான்மணிக்கடிகை–அசு

(கூ) புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப் பன்பி லவர்க்கு

(இ—ள்) யாக்கையகத்து உறுப்பு அன்பு இலவர்க்கு — யாக்கையகத்தின்கணின்று இல்லறத்திற் குறுப்பாகிய அன்புடைய ரல்லாதார்க்கு; புறத்து உறுப்பு எல்லாம் எவன் செய்யும்—ஏனைப் புறத்தின்கணின்று உறுப்பாவன வெல்லாம் அவவறஞ் செய்தற்கண் என்ன உதவியைச் செய்யும்?

'புறத்துறுப'பாவன: இடனும், பொருளும், ஏவல் செய்வாரு முதலாயின. துணையொடு கூடாதவழி அவற்றாற் பயனின்மையின், 'எவன் செய்யு' மென்றார். உறுப்புப் போறலின், 'உறுப்'பெனப் பட்டன. யாக்கையிற் கண் முதலிய உறுப்புக்களெல்லாம் என்ன பயனைச் செய்யும், மனத்தின்கணுறுப்பாகிய அன்பிலாதார்க் கென்றுரைப்பாரு முளர். அதற்கு இல்லறத்தோடு யாதும் இயைபில்லாமை அறிக.

(ய) அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு

(இ—ள்) அன்பின் வழியது உயிர்நிலை—அன்பு முதலாக அதன்வழி நின்ற உடம்பே உயிர்நின்ற உடம்பாவது; அஃது இலார்க்கு உடம்பு என்பு தோல் போர்த்த—அவ்வன்பில்லாதார்க்கு உளவான உடம்புகள் என்பினைத் தோலால் போர்த்தனவாம், உயிர் நின்றனவாகா.

இல்லறம் பயவாமையின் அன்னவாயின.+ இவை நான்கு பாட்டானும் அன்பில் வழிப்படுங் குற்றங்கூறப் பட்டது.

---

## அதிகாரம் — உஉ

## ஒப்புரவறிதல்*

[அஃதாவது, உலக நடையினை அறிந்து செய்தல். உலகநடை வேத நடைபோல அறநூல்களுட் கூறப்படுவதன்றித் தாமேயறிந்து செய்யுந்தன்மைத் தாகலின், ஒப்புரவறிதலென்றார். மேல் மனமொழி மெய்களால் தவிரத்தகுவன கூறினார். இனிச் செய்யத் தகுவனவற்றுள் எஞ்சிநின்றன கூறுகின்றாராகலின், இது **தீவினையச்சத்**தின் பின் வைக்கப்பட்டது.]

(க) கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ உலகு

---

+ என்புதோல் போர்த்தவாயின.

* அறிவின்பயன்; விருந்தோம்பல்—அன்பின்பயன்; ஈகை—அருளின்பயன்.

(இ—ள்) மாரிமாட்டு உலகு என் ஆற்றும்—தமக்கு நீருதவுகின்ற மேகங்களிடத்து உயிர்கள் என்ன கைம்மாறு செய்யா நின்றன; கடப்பாடு கைம்மாறு வேண்டா—ஆகலான், அம்மேகங்கள் போல்வார் செய்யும் ஒப்புரவுகளும் கைம்மாறு நோக்குவன வல்ல.

'என்னுற்று' மென்ற வினு யாதுமாற்ரு வென்பது தோன்ற நிற்றலின், அது வருவித்துரைக்கப்படும். தவிருந்தன்மையவல்ல வென்பது 'கடப்பா'டென்னும் பெயரானே பெறப்பட்டது. செய்வாரது வேண்டாமையைச் செய்யப்படுவனமேல் ஏற்றினுர்.

(உ) தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு

(இ—ள்) தக்கார்க்கு — தகுதி யுடையார்க்காயின்; தாள் ஆற்றித் தந்த பொருள எல்லாம்—முயறலைச் செய்தீட்டிய பொருள்முழுதும்; வேளாண்மை செய்தற் பொருட்டு—ஒப்புரவு செய்தற் பயத்தவாம்.

பிறர்க்குதவார் போலத் தாமே உண்டற் பொருட்டும் வைத்திழத்தற் பொருட்டும் அன்றென்பதாயிற்று.

(ங) புத்தே ளுலகத்தும் ஈண்டும் பெறலரிதே
ஒப்புரவின் நல்ல பிற

(இ—ள்) புத்தேள் உலகத்தும் ஈண்டும்—தேவருலகத்தும் இவ் வுலகத்தும்; ஒப்புரவின் நல்ல பிற பெறல் அரிது—ஒப்புரவுபோல நல்லன பிற செயல்களைப் பெறுதலரிது;

ஈவாரும் ஏற்பாருமின்றி எல்லாரும் ஒரு தன்மையராதலின் 'புத்தேளுலகத்'தரிதாயிற்று; யாவர்க்கும் ஒப்பது இதுபோற் பிறிதொன்றின்மையின், இவ்வுலகத்தரி தாயிற்று. பெறற்கரிதென்று பாடமோதிப் பெறுதற்குக் காரணம் அரிதென்றுரைப்பாரு முளர். இவை மூன்று பாட்டானும் ஒப்புரவினது சிறப்புக் கூறப்பட்டது.

(ச) ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்

(இ—ள்) உயிர்வாழ்வான் ஒத்தது அறிவான்—உயிரோடுகூடி வாழ்வானுவான் உலக நடையினையறிந்து செய்வான்; மற்றையான் செத்தாருள் வைக்கப் படும்—அஃதறிந்து செய்யாதவன், உயிருடையானே யாயினும் செத்தாருள் ஒருவனுகக் கருதப்படும்.

உயிரினறிவுஞ் செயலுங் காணாமையின், 'செத்தாருள் வைக்கப்படு' மென்றார். இதனால் உலகநடை வழு, வேதநடை வழுப்போலத் தீர்திற னுடைத்தன் றென்பது கூறப்பட்டது.

(௫) ஊருணி* நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு

(இ-ள்) உலகு அவாம் பேரறிவாளன் திரு—உலக நடையை விரும்பிச் செய்யும் பெரிய அறிவினை யுடையவனது செல்வம்; ஊருணி நீர்நிறைந்தற்று—ஊரின் வாழ்வார் தண்ணீர் உண்ணும் குளம் நீர்நிறைந் தாற் போலும்.

நிறைதலென்னும் இடத்து நிகழ் பொருளின் தொழில் இடத்தின் மேலேற்றப் பட்டது.○ பாழ்போகாது நெடிது நின்று எல்லார்க்கும் வேண் டுவன தப்பாதுதவு மென்பதாம்.

(௬) பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கட் படின்

(இ-ள்) செல்வம் நயனுடையான்கண் படின்—செல்வம் ஒப்புரவு செய்வான்கண்ணே படுமாயின்; பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்று—அது பயன்படுமரம் ஊர்நடுவே பழுத்தாற்போலும்.

உலகநீதி பலவற்றுள்ளும் ஒப்புரவு சிறந்தமையின், அதனையே 'நயன்' என்றார். எல்லார்க்கும் எளிதிற் பயன்கொடுக்கும் என்பதாம்.

(௭) மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கட் படின்

(இ-ள்) செல்வம் பெருந்தகையான் கண் படின் — செல்வம் ஒப் புரவு செய்யும் பெரிய தகைமை யுடையான்கண்ணே படுமாயின்; மருந்து ஆகித் தப்பா மரத்தற்று—அஃது எல்லா உறுப்பும் பிணிகட்கு மருந்தாய்த் தப்பாத மரத்தை ஒக்கும்.

'தப்புத'லாவது கோடற்கரிய இடங்களில் நின்றாதல், மறைந்து நின்றாதல், காலத்தான் வேறுபட்டாதல் பயன்படாமை. தன் குறை நோக் காது எல்லார் வருத்தமும் தீர்க்கு மென்பதாம். இவை மூன்றுபாட்டானும் கடப்பாட்டாளனுடைய பொருள் பயன்படுமாறு கூறப்பட்டது.

* ஊராரால் நீர் உண்ணப்படும் குளம். ○இடம்-குளம். இடத்து நிகழ்பொருள்-நீர்.

(அ) இடனில்* பருவத்தும் ஒப்புரவிற் கொல்கார்
கடனறி +காட்சி யவர்

(இ-ள்) இடன் இல் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார் — செல்வம் சுருங்கிய காலத்தும் ஒப்புரவு செய்தற்குத் தளரார்; கடன் அறி காட்சி யவர்—தாஞ் செய்யத் தகுவனவற்றை அறிந்த இயற்கை அறிவுடையார்.

பிறவெல்லாம் ஒழியினும், இஃதொழியா ரென்பதாம்.

(சு) நயனுடையான் நல்கூர்ந்தா னுதல் செயுநீர
செய்யா தமைகலா வாறு

(இ-ள்) நயன் உடையான் நல்கூர்ந்தான் ஆதல்—ஒப்புரவு செய்தலை யுடையான் நல்கூர்ந்தானுதலாவது;செய்யும் நீர செய்யாது அமைகலா ஆறு—தவிராது செய்யும் நீர்மையை யுடைய அப்வொப்புரவுகளைச் செய்யப் பெருது வருந்துகின்ற இயல்பாம்.

தானுகர்வன நுகரப்பெருமை யன்றென்பதாம். இவை இரண்டு பாட்டானும் வறுமையான் ஒப்புர வொழிதற்பாற றன்றென்பது கூறப்பட்டது.

(எ) ஒப்புரவி னுல்வருங் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோட் டக்க துடைத்து

(இ-ள்) ஒப்புரவினுல் கேடுவரும் எனின் — ஒப்புரவு செய்தலான் ஒருவனுக்குப் பொருட்கேடு வருமென்பாருளராயின்; அஃது ஒருவன் விற்றுக்கோள் தக்கது உடைத்து—அக்கேடு தன்னை விற்ருயினுங் கொள்ளுந் தகுதியை யுடைத்து.

தன்னை விற்றுக்கொள்ளப் படுவதொரு பொருளில்லை யன்றே இஃ தாயின் அதுவுஞ் செய்யப்படு மென்றது, புகழ்பயத்தல் நோக்கி. இதனுல் ஒப்புரவினுற் கெடுவது கேடன்றென்பது கூறப்பட்டது.

---

*இடன்-செல்வம். இடனின்றி இரங்தோர்க்கு (கலி-பாலை-க)

+ காட்சி என்பது குறட்கண் "மெய்யுணர்வே" சுட்டிவரல் காண்க.

## அதிகாரம் — ௩0

## வாய்மை

[அஃதாவது, மெய்யினது தன்மை. பெரும்பான்மையும் காமமும் பொருளும் பற்றி நிகழ்வதாய பொய்ம்மையை விலக்கலின், இது கூடாவொழுக்கங், கள்ளாமை களின் பின் வைக்கப்பட்டது. ]

(௧) வாய்மை எனப்படுவ தியாதெனின் யாதொன்றுந்
தீமை யிலாத சொலல்

(இ—ள்) வாய்மை எனப்படுவது யாதுஎனின்—மெய்ம்மையென்று சிறப்பித்துச் சொல்லப்படுவது யாதென்று வினவின்; தீமையாதொன்றும் இலாத சொலல்—அது பிறிதோருயிர்க்குத் தீங்கு சிறிதும் பயவாத சொற்களைச் சொல்லுதல்.

தீமையாதொன்று மிலாதவென இயையும். 'எனப்படுவ' தென்பது "ஊரெனப்படுவ துறையூர்" என்றாற்போல நின்றது. இதனான் நிகழ்ந்தது கூறலென்பது நீக்கப்பட்டது. அதுதானும், தீங்கு பயவாதாயின் மெய்ம்மையாம்; பயப்பிற் பொய்ம்மையா மென்பது கருத்து.

(௨) பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்

(இ—ள்) புரை தீர்ந்த நன்மை பயக்கும் எனின்—பிறர்க்குக் குற்றந் தீர்ந்த நன்மையைப் பயக்குமாயின்; பொய்ம்மையும் வாய்மை யிடத்த—பொய்ம்மைச் சொற்களும் மெய்ம்மைச் சொற்களின் பாலவாம்.

'குற்றந் தீர்ந்த நன்மை' அறம்; அதனைப் பயத்தலாவது கேடாதல் சாக்காடாதல் எய்த நின்றதோருயிர் அச்சொற்களின் பொய்ம்மையானே அதனினீங்கி இன்புறுதல். நிகழாதது கூறலும், நன்மை பயவாதாயிற் பொய்ம்மையாம்; பயப்பின் மெய்ம்மையா மென்பது கருத்து. இவை இரண்டு பாட்டானும் தீங்கு பயவாத நிகழ்ந்தது கூறலும், நன்மை பயக்கும் நிகழாதது கூறலும், மெய்ம்மையெனவும், நன்மை பயவாத நிகழாதது கூறலும், தீங்கு பயக்கும் நிகழ்ந்தது கூறலும் பொய்ம்மையெனவும், அவற்றதிலக்கணங் கூறப்பட்டது. *

(௩) தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்

* வாழ்விற் கியைந்த வாய்மை இலக்கணம் கூறியது.

(இ—ள்) தன்னெஞ்சு அறிவது பொய்யற்க—ஒருவன் தன்னெஞ்சு அறிவ தொன்றனைப் பிறரறிந்திலரென்று பொய்யா தொழிக; பொய்த்தபின் தன் நெஞ்சே தன்னைச் சுடும்—பொய்த்தானாயின், அதனை அறிந்த தன் நெஞ்சே அப்பாவத்திற்குக் கரியாய் நின்று, தன்னை அதன் பயனாய துன்பத்தை எய்துவிக்கும்.

நெஞ்சு கரியாதல், "கண்டவரில்லென உலகத்து ளுணராதார்—தங்காது தகைவின்றித் தாஞ்செய்யும் வினைகளுள்—நெஞ்சறிந்த கொடியவை மறைப்பவு மறையாவா—நெஞ்சத்திற் குறுகிய கரியில்லை யாகலின்" ○ என்பதனானும் அறிக. பொய் மறையாமையின், அது கூறலாகா தென்பது இதனாற் கூறப்பட்டது.

(ச) உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளன்

(இ—ள்) உள்ளத்தால் பொய்யாது ஒழுகின்—ஒருவன் தன்னுள்ளத்கேற்பப் பொய்கூறா தொழுகுவனாயின்; உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்—அவன் உயர்ந்தோருளத்தின் கணெல்லாம் உளனாம்.

'உள்ளத்தா' லென்பது வேற்றுமை மயக்கம். 'பொய்கூறா தொழுகுத' லாவது மெய்கூறி யொழுகுதல். அவனதறத்தின தருமை நோக்கி உயர்ந்தோர் எப்பொழுதும் அவனையே நினைப்ப ரென்பதாம். இதனால் இம்மைப் பயன் கூறப்பட்டது.

(ரு) மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு△
●தானஞ் செய்வாரிற் றலை

(இ—ள்) மனத்தொடு வாய்மை மொழியின்—ஒருவன் தன் மனத்தொடு பொருந்த வாய்மையைச் சொல்வானாயின்; தவத்தொடு தானம் செய்வாரின் தலை — அவன் தவமுந் தானமும் ஒருங்கு செய்வாரினுஞ் சிறப்புடையன்.

'மனத்தொடு பொருந்துதல்' மனத்திற் கேறுதல். புறமாகிய மெய்யாற் செய்யுமவற்றினும் அகமாகிய * மனமொழிகளாற் செய்யுமது பயனுடைத் தென்பதாம்.

○ கலித்தொகை, நெய்தல்—அ. சேர்த்த நெஞ்சறிவுறாஉ

△ தவமாவது: மனம் பொறிவழி போகாது நிற்றற் பொருட்டு விரதங்களான் உண்டி சுருங்கல் முதலாயின.

● தானமாவது: அறநெறியான் வந்த பொருள்களைத் தக்கார்க்கு உவகையொடுங் கொடுத்தல். * மொழியும் அகமாதல் காண்க.

(சூ) பொய்யாமை யன்ன புகழில்லை எய்யாமை
எல்லா அறமுந் தரும்

(இ-ள்) பொய்யாமை அன்ன புகழில்லை—ஒருவன் இம்மைக்குப் பொய்யாமையை யொத்த புகழ்க் காரணமில்லை; எய்யாமை எல்லா அறமும் தரும்—மறுமைக்கு மெய்வருந்தாமல் அவனுக்கு எல்லா அறங்களையும் தானே கொடுக்கும்.

'புகழ்' ஈண்டு ஆகுபெயர். இல்லறத்திற்குப் பொருள்கூட்டல் முதலியவற்றானும், துறவறத்திற்கு உண்ணாமை முதலியவற்றானும் வருந்தல் வேண்டுமன்றே, அவ்வருத்தங்கள் புகுதாமல் அவ்விருவகைப் பயனையுந் தானே தருமென்பார், 'எய்யாமை எல்லா அறமுந் தரு'மென்றார்.

(எ) பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று

(இ-ள்) பொய்யாமை பொய்யாமை ஆற்றின்—ஒருவன் பொய்யாமையையே பொய்யாமையையே செய்யவல்ல னாயின்; பிற அறம் செய்யாமை செய்யாமை நன்று — அவன் பிற அறங்களைச் செய்யாமையே செய்யாமையே நன்று.

அடுக்கிரண்டினுள், முதலது இடைவிடாமை மேற்று; ஏனையது துணிவின் மேற்று. பல அறங்களையும் மேற்கொண்டு செய்தற்கருமையாற் சில தவறிற் குற்றப்படுதலின், அவை யெல்லாவற்றின் பயனையுந் தானே தரவற்றாய இதனையே மேற்கொண்டு தவறுமற் செய்தல் நன்றென்பார், 'செய்யாமை செய்யாமை நன்' றென்றார். இதனை இவ்வாறன்றிப் பொய்யாமையைப் பொய்யாமற் செய்யின் பிறவறஞ் செய்கை நன்றெனப் பொழிப்பாக்கிப், பொய்கூறிற் பிறவறஞ் செய்கை நன்றாகா தென்பது அதனாற் போந்த பொருளாக்கி உரைப்பாரு முளர். பிறவறங்களெல்லாந் தரும் பயனைத் தானேதரும் ஆற்றலுடைத்தென மறுமைப்பயனது மிகுதி இவை மூன்று பாட்டானுங் கூறப்பட்டது.

(அ) புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும்

(இ-ள்) புறம் தூய்மை நீரான் அமையும் — ஒருவனுக்கு உடம்பு தூய்தாந் தன்மை நீரானே யுண்டாம்; அகம் தூய்மை வாய்மையான் காணப்படும்—அதுபோல மனந் தூய்தாந் தன்மை வாய்மையா னுண்டாம்.

காணப்படுவ துள்ளதாகலின் உண்டா மென்றுரைக்கப் பட்டது. உடம்பு தூய்தாதல்* வாலாமை நீங்குதல். மனம் தூய்தாதல் மெய்யுணர்தல்.

* தூய்மையின்மை.

டாக்டர் க.த. திருநாவுக்கரசு,
கோட்டூர்ப்புரம்,
சென்னை-85.

புறந்தூய்மைக்கு நீரல்லது காரணமில்லாதாற் போல, அகந்தூய்மைக்கு வாய்மை யல்லது காரணமில்லை யென்றவாறாயிற்று. இதனானே துறந்தார்க்கு இரண்டு தூய்மையும் வேண்டுமென்பதூஉம் பெற்றாம்.

(கூ) எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு

(இ-ள்) எல்லா விளக்கும் விளக்கு அல்ல—புறத்திருள் கடியும் உலகத்தார் விளக்குகளெல்லாம் விளக்காகா; சான்றோர்க்கு விளக்கு பொய்யா விளக்கே — துறவானமைந்தார்க்கு விளக்காவது மனத்திருள் கடியும் பொய்யாமையாகிய விளக்கே.

உலகத்தார் விளக்காவன: ஞாயிறு, திங்கள், தீயென்பன. இவற்றிற்குப் போகாத இருள் போகலின், 'பொய்யா விளக்கே விளக்' கென்றார். அவ்விருளாவது அறியாமை. பொய்யாத விளக்கென்பது குறைந்து நின்றது; பொய்கூறாமை யாகிய விளக்கென்றவாறு. இனி, இதற்குக் கல்வி முதலியவற்றான் வரும் விளக்கமெல்லாம் விளக்கமல்ல; அமைந்தார்க்கு விளக்கமாவது பொய்யாமையான் வரும் விளக்கமே யென்றுரைப்பாரு முளர்.○

(ய) யாமெய்யாக் கண்டவற்று ளில்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற

(இ-ள்) யாம் மெய்யாக் கண்டவற்றுள்—யாம் மெய்ந்நூல்களாகக் கண்ட நூல்களுள்; எனைத் தொன்றும் வாய்மையின் நல்ல பிற இல்லை—யாதொரு தன்மையானும் வாய்மையின் மிக்கனவாகச் சொல்லப்பட்ட பிற அறங்களில்லை.

மெய்யுணர்த்துவனவற்றை 'மெய்' யென்றார். அவையாவன: தங்கண் மயக்கமின்மையின் பொருள்களை யுள்ளவாறுணர வல்லராய்க் காம வெகுளிக ளின்மையின் அவற்றை யுணர்ந்தவாறே உரைக்கவும் வல்லராய இறைவர், அருளான் உலகத்தார் உறுதி யெய்துதற் பொருட்டுக் கூறிய ஆகமங்கள். அவை யெல்லாவற்றினும் இஃதொப்ப முடிந்த தென்பதாம். இவை மூன்று பாட்டானும் இவ்வறத்தினது தலைமை கூறப்பட்டது.

---

○ மணக்குடவர்.

## அதிகாரம் — ருஅ

## கண்ணேட்டம்

அஃதாவது, தன்ெெடு பயின்ருரைக் கண்டால் அவர்கூறியன மறுக்க மாட்டாமை. இஃது அவர்மேற் கண்சென்றவழி நிகழ்வதாகலின், அப்பெயர்த்தாயிற்று. மேல் வெருவந்த செய்யாமையுட் கூறிய அதனையே சிறப்புப் பற்றி விரித்துக் கூறுகின்றமையின், இஃததன் பின் வைக்கப்பட்டது.

(க) கண்ணேட்டம் என்னும் கழிபெருங் காரிகை
உண்மையான் உண்டிவ் வுலகு

(இ—ள்) கண்ணேட்டம் என்னும் கழிபெருங் காரிகை உண்மையான்—கண்ணேட்ட மென்று சொல்லப்படுகின்ற சிறப்புடைய அழகு அரசர் மாட்டு உண்டாகலான்; இவ்வுலகு உண்டு — இவ்வுலகம் உண்டாகா நின்றது.

'கழிபெருங் காரிகை' யென்புழி ஒரு பொருட் பன்மொழி* இவ்வுயி ரழகது சிறப்புணர நின்றது. இவ்வழகு அதற்குறுப்பாகலின்,'உண்மையா' னென நிலைபேறுங் கூறினர். இன்மை வெருவந்த செய்தலாகலின், அவர் நாட்டுவாழ்வார் புலியை யடைந்த புல்வாயினம் போன்று ஏமஞ்சாராமை பற்றி, 'இவ்வுலகுண்' டென்ருர்.

(உ) கண்ணேட்டத் துள்ள துலகியல் அஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை

(இ—ள்) ○உலகியல் கண்ணேட்டத்து உள்ளது — உலக நடை கண்ணேட்டத்தின் கண்ணே நிகழ்வது; அஃது இலார் உண்மை நிலக்குப் பொறை—ஆகலான், அக்கண்ணேட்ட மில்லாதார் உளராதல் இந்நிலத் திற்குப் பாரமாதற்கே, பிறிதொன்றற்கன்று.

உலக நடையாவது ஒப்புரவு செய்தல், புறந்தருதல், பிழைத்தன பொறுத்த லென்றிவை முதலாயின. அவை நிகழாமையால் தனக்கும் பிறர்க்கும் பயன்படா ரென்பது பற்றி, 'நிலக்குப் பொறை'யென்ருர். ஆதற் கென்பது சொல்லெச்சம். இவை இரண்டு பாட்டானுங் கண்ணேட்டத்தது சிறப்புக் கூறப்பட்டது.

---

* ஒருபொருளிருசொற் பிரிவிலவரையார் (406—தொல். சொல்)

○ பொருளின்பங்களை உலகியல் என்ருர், அவை இம்மைக்கண்ண வாகலின் (குறள்-உ0)

## (௩) பண்ணென்னும் பாடற் கியைபின்றேற் கண்ணென்னும் கண்ணோட்டம் இல்லாத கண்

(இ-ள்) பண் என்னும் பாடற்கு இயைபு இன்றேல்—பண் என்ன பயத்ததாம் பாடற் றொழிலோடு பொருத்த மின்றாயின்? கண் என்னும் கண்ணோட்டம் இல்லாத கண்—அதுபோலக் கண் என்ன பயத்ததாங் கண்ணோட்டமில்லாத விடத்து?

'பண்', 'கண்' என்பன சாதிப் பெயர். பண்களாவன: பாலையாழ் முதலிய நூற்று மூன்று. பாடற்றொழில்களாவன: யாழின்கண் வார்தல் முதலிய வெட்டும். மிடற்றின்கண் எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பிதம், குடிலமென்னு மைந்தும். பெருவண்ணம், இடைவண்ணம், வனப்புவண்ண முதலிய வண்ணங்க ளெழுபத்தாறுமாம்.* இவற்றோ டியையாத வழிப் பண்ணாற் பயனில்லாதவாறு போலக் கண்ணோட்டத் தியையாதவழிக் கண்ணாற் பயனில்லை யென்பதாம். கண்சென்றவழி நிகழ்தல்பற்றி அதனை யிடமாக்கினார். இறுதிக்கட் கண்ணென்பதனைக் "கண்ணகன் ஞாலம்" ○ என்புழிப் போலக் கொள்க.△

## (௪) உளபோல் முகத்தெவன் செய்யும் அளவினாற் கண்ணோட்டம் இல்லாத கண்

(இ-ள்) முகத்து உளபோல் எவன் செய்யும்—கண்டார்க்கு முகத்தின்கண் உளபோற் றோன்றலல்லது வேறென்ன பயனைச் செய்யும்; அளவினான் கண்ணோட்டம் இல்லாத கண் — அளவிறவாத கண்ணோடுதலை யுடையவல்லாத கண்கள்?

தோன்றலல்ல தென்னுஞ் சொற்கள் அவாய் நிலையான் வந்தன. கழி கண்ணோட்டத்தி னீக்குதற்கு, 'அளவினா' னென்றார். ஒரு பயனையுஞ் செய்யா வென்பது குறிப்பெச்சம்.

## (௫) கண்ணிற் கணிகலங் கண்ணோட்டம் அஃதின்றேற் புண்ணென் றுணரப் படும்

(இ-ள்) கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம் — ஒருவன் கண்ணிற்கு அணியுங் கலமாவது கண்ணோட்டம்; அ∴து இன்றேல் புண் என்று உணரப்படும்—அக்கல மில்லையாயின் அ∴தறிவுடையாராற் புண்ணென் றறியப்படும்.

---

* விரிவு சிலப்பதிகார வுரை; தொல். பொருளதிகாரம் காண்க. ○ திரிகடுகம்-௧.

△ கண்ணென்னும் பொருளாவது 'கண்ணின்று கூறுதலாற்றா வனாயின்'எனவும், கண்ணென்னு மிடைச்சொல்லா லுணர்த்தப்படும் இடப்பொருண்மை. (தொல்-சொல் 82)

வேறணிகல மின்மையிற் 'கண்ணிற் கணிகல' மென்றும், கண்ணுய்த் தோன்றினும் நோய்களானும் புலன் பற்றலானுந் துயர் விளைத்தலேக்கிப் 'புண்ணென் றுணரப்படு' மென்றுங் கூறினர். இவை மூன்று பாட்டானும் ஓடாது நின்ற கணணின் குற்றங் கூறப்பட்டது.

(சு) மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோ
டியைந்து கண்ணோடா தவர்

(இ-ள்) கணணோடு இயைந்து கண்ணோடாதவர் — ஓடுதற்குரிய கண்ணோடு பொருந்தி வைத்து அஃதோடாதவர்; மண்ணோடு இயைந்த மரத்து அனையர்—இயங்கா நின்றாராயினும் மணணோடு பொருந்தி நிற்கின்ற மரத்தினை யொப்பர்.

'ஓடாதவ'ரென்புழிச் சினைவினை முதன்மே னின்றது. மரமுங் கண்ணோடியைந்து கண்ணோடாமையின், இது தொழிலுவமம். இதனைச் சுதை மண்ணோடுகூடிய மரப்பாவை யென்றுரைப்பாரு முளர்.* அஃதுரையன்மை, காணப்படுங் கண்ணுனன்றி அதனுள் மறைந்து நிற்கின்ற ஒருசாருள்ளீட்டாற் கூறினமையானும், ''மரக்கண்ணோ மண்ணுள்வார் கண்ணென்—றிரக் கண்டாய்'' ○ என்பதனுனு மறிக.

(எ) கண்ணோட்டம் இல்லவர் கண்ணிலர் கண்ணுடையார்
கண்ணோட்டம் இன்மையும் இல்

(இ-ள்) கண்ணோட்டம் இல்லவர் கண் இலர்—கண்ணோட்ட மில்லாதவர் கண்ணுடையரு மல்லர்; கண் உடையார் கண்ணோட்டம் இன்மையும் இல்—கண்ணுடையவர் கண்ணோட்ட மிலராதலு மில்லை.

கண்ணுடையராயிற் காட்சிக் கண்ணே அஃதோடுமென்பது பற்றிக் 'கண்ணோட்ட மில்லவர் கண்ணில' ரெனக்கூறிப் பின் அதனை யெதிர்மறை முகத்தான் விளக்கினர். உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை. இவை இரண்டு பாட்டானும் கண்ணோடாதார திழிபு கூறப்பட்டது.

(அ) கருமஞ் சிதையாமற் கண்ணோட வல்லார்க்
குரிமை உடைத்திவ் வுலகு

(இ-ள்) கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு — முறை செய்தலாகிய தந் தொழில் அழியாமற் கண்ணோட வல்ல வேந்தர்க்கு; உரிமை உடைத்து இவ்வுலகு—உரித்தாந் தன்மை யுடைத்து இவ்வுலகம்.

* மணக்குடவர். ○ முத்தொள்ளாயிரம்.

தம்மோடு பயின்ருர் பிறரை இடுக்கண் செய்துழி அவரைக் கண்ணேடி யொருதார்க்கு முறை சிதைதல் மேல் "ஓர்ந்து கண்ணேடாது"* என்ற முறை இலக்கணத்தானும் பெற்ரும். முறை சிதைய வரும் வழிக் கண்ணேடாமையும் வாரா வழிக் கண்ணேடலும் ஒருவற்கு இயல்பாதலரு மையிற் 'கண்ணேட வல்லார்க்கு' என்றும், அவ் வியல்புடையார்க்கு உலக முழுதும் நெடுங்காலஞ் சேறலின் 'உரிமை யுடைத்' தென்றுங் கூறிஞர். இதனுற் கண்ணேடுமாறு கூறப்பட்டது.

(கூ) ஒறுத்தாற்றும் பண்பினுர் கண்ணுங் கண்ணேடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை

(இ-ள்) ஒறுத்து ஆற்றும் பண்பினுர் கண்ணும்—தம்மையொறுக்கு மியல்புடையாரிடத்தும்; கண்ணேடிப் பொறுத்து ஆற்றும் பண்பே தலை—கண்ணேட்ட முடையராய்க் குற்றத்தைப் பொறுக்கு மியல்பே அரசர்க்குத் தலையாய இயல்பாவது.

'பண்பிஞு' ரென்றதனுல் அவர் பயிற்சி பெற்ரும். 'ஒறுத்தாற்றும்', 'பொறுத்தாற்றும்' என்பன ஈண்டு ஒரு சொன்னீர.

(ம) பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்

(இ-ள்) நஞ்சு பெயக்கண்டும் உண்டு அமைவர்—பயின்ருர்தமக்கு நஞ்சிடக் கண்டுவைத்தும் கண் மறுக்கமாட்டாமையின் அதனையுண்டு பின்னும் அவரோடு மேவுவர்; நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்—யாவரானும் விரும்பத்தக்க கண்ணேட்டத்தினை வேண்டுமவர்.

'நாகரிக'மென்பது கண்ணேட்டமாதல் "முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பி-னஞ்சுமுண்பர் நனிநாகரிகர்" ○ என்பதனுனு மறிக. அரசர் அவரை ஒறுது கண்ணேடற்பாலது தம்மாட்டுக் குற்றஞ் செய்துழியென்பது இவ்விரண்டு பாட்டானுங் கூறப்பட்டது.

---

* குறள்-டுசக. ○ நற்றிணை.

## அதிகாரம் — ௯௯

## சான்ருண்மை *

[அஃதாவது, பலகுணங்களானு நிறைந்து அவற்றை யாடற்றன்மை. பல குணங்களானு மென்பது சாலுதற்ருெழிலாற் பெறப்படுதலின், அவற்றையென்பது வருவிக்கப்பட்டது. பெருமையுளடங்காத குணங்கள் பலவற்றையுந் தொகுத்துக்கொண்டு நிற்றலின், இஃது அதன்பின் வைக்கப் பட்டது.]

**(க) கடனென்ப நல்லவை யெல்லாங் கடனறிந்து
சான்ருண்மை மேற்கொள் பவர்க்கு**

(இ—ள்) கடன் அறிந்து சான்ருண்மை மேற் கொள்பவர்க்கு—நமக்குத் தகுவது இதுவென்றறிந்து சாண்ருண்மையை மேற்கொண்டொழுகுவார்க்கு; நல்லவை எல்லாம் கடன் என்ப—நல்லனவாய குணங்களெல்லாம் இயல்பாயிருக்கு மென்று சொல்லுவர் நூலோர்.

சிலகுணங்க ளிலவாய வழியும், உள்ளனசெய்து கொண்டனவாய வழியுஞ் 'சான்ருண்மை' யென்னும் சொற்பொருள் கூடாமையின், நூலோர் இவ்வேதுப் பெயர் ○ பற்றி அவரிலக்கணம் இவ்வாறு கூறுவரென்பதாம்.

**(உ) குணநலஞ் சான்ருேர் நலனே பிறநல
மெந்நலத் துள்ளதூஉ மன்று**

(இ—ள்) சான்ருேர் நலன் குண நலமே — சான்ருேர் நலமாவது குணங்களாளுய நலமே; பிற நலம் எந்நலத்து உள்ளதூஉம் அன்று—அஃதொழிந்த வுறுப்புக்களாளுய நலம் ஒரு நலத்தினு முள்ளதன்று.

அகநலத்தை முன்னே பிரித்தமையின் ஏனைப் புறநலத்தைப் 'பிறநல' மென்றும், அது குடிப்பிறப்புங் கல்வியுமுதலாக நூலோரெடுத்த நலங்களுட் புகுதாமையின் 'எந்நலத்துள்ளதூஉ மன்'றென்றுங் கூறிஞர். இவை இரண்டு பாட்டானும் சால்பிற்கேற்ற குணங்கள் பொதுவகையாற் கூறப்பட்டன.

**(ங) அன்புநா ணெப்புரவு கண்ணேட்டம் வாய்மையோ
டைந்துசால் பூன்றிய தூண்**

(இ—ள்) அன்பு – சுற்றத்தார் மேலேயன்றிப் பிறர்மேலுமுளதாய அன்பும்; நாண் – பழிபாவங்களில் நாணலும்; ஒப்புரவு – யாவர்மாட்டும் ஒப்புரவு செய்தலும்; கண்ணேட்டம் – பழையார்மேற் கண்ணேடலும்,

* சொற்பொருள் விளக்கம் அறிக. ○ காரணப்பெயர், அந்தணர் என்பதுபோல.

வாய்மை – எவ்விடத்தும்மெய்ம்மை கூறலும் என; சால்பு ஊன்றிய தூண் ஐந்து – சால்பென்னும் பாரத்தைத் தாங்கிய தூண்கள் ஐந்து.

எண்ணொடு முன்னவற்றோடுங் கூடிற்று. இக் குணங்கள் இல்வழிச் சால்பு நிலைபெறுமையின், இவற்றைத் 'தூ'ணென்றார். ஏகதேச வுருவகம்.

(சு) கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு

(இ–ள்) நோன்மை கொல்லா நலத்தது—பிற அறங்களும் வேண்டுமாயினுந் தவம் ஓருயிரையுங் கொல்லாத அறத்தின்கண்ணதாம்; சால்பு பிறர்தீமை சொல்லா நலத்தது—அதுபோலப் பிற குணங்களும் வேண்டுமாயினுஞ் சால்பு பிறர்குற்றத்தைச் சொல்லாத குணத்தின்கண்ணதாம்.

'நல'மென்னும் ஆகுபெயர்ப் பொருளிரண்டனையுந் தலைமைதோன்ற இவ்விரண்டிற்கும் அதிகாரமாக்கிக் கூறினார். தவத்திற்குக் கொல்லா அறஞ் சிறந்தாற்போலச் சால்பிற்குப் பிறர்குற்றஞ் சொல்லாக்குணஞ் சிறந்த தென்பதாம்.

(ரு) ஆற்றுவா ராற்றல் பணித லதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை

(இ–ள்) ஆற்றுவார் ஆற்றல் பணிதல்—ஒரு கருமத்தைச் செய்து முடிப்பாரது ஆற்றலாவது அதற்குத் துணையாவாரைத் தாழ்ந்து கூட்டிக் கொள்ளுதல்; சான்றோர் மாற்றாரை மாற்றும் படை அது—இனிச் சால்புடையார் தம் பகைவரைப் பகைமையொழிக்குங் கருவியும் அது.

'ஆற்றல்' அது வல்லராந் தன்மை. இறந்தது தழீஇய எச்சவும்மை விகாரத்தால் தொக்கது. சால்பிற்கேற்ற பணிதற் குணத்தது சிறப்புக் கூறுவார், ஏனையது* முடன்கூறினார்.

(சா) சால்பிற்குக் கட்டளை யாதெனில் தோல்வி
துலையல்லார் கண்ணும் கொளல்

(இ–ள்) சால்பிற்குக் கட்டளை யாது எனின்—சால்பாகிய பொன்னின் அளவறிதற்கு உரைகல்லாகிய செயல் யாதெனின், தோல்வி துலை அல்லார் கண்ணும் கொளல்—அதுதம்மின் உயர்ந்தார் மாட்டுக் கொள்ளுந் தோல்வியை இழிந்தார் மாட்டும் கோடல்.

'துலை'—ஒப்பு. எச்சவும்மையான் இருதிறத்தார்○ கண்ணும் வேண்டுதல் பெற்றும். கொள்ளுதல்—வெல்லுமாற்ற லுடையரா யிருந்தே ஏற்றுக்

* மாற்றாரை மாற்றும் படை. ○ உயர்ந்தாரும் இழிந்தாரும்.

கொள்ளுதல். இழிந்தாரை வெல்லுதல் கருதித் தம்மோடு ஒப்பித்துக் கொள்ளாது தோல்வியான் அவரின் உயர்வராயின், அதனாற் சால்பளவு அறியப்படு மென்பதாம்.

### (எ) இன்னா செய்தார்க்கு மினியவே செய்யாக்கா லென்ன பயத்ததோ சால்பு

(இ-ள்) இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்—தமக்கு இன்னாதவற்றைச் செய்தார்க்குஞ் சால்புடையார் இனியவற்றைச் செய்யா ராயின்; சால்பு என்ன பயத்தது—அச்சால்பு வேறென்ன பயனை யுடைத்து?

சிறப்பும்மை அவர் இன்னா செய்தற்கு இடனாதல் விளக்கி நின்றது. 'ஓ'காரம் அசை. வினா எதிர்மறைப் பொருட்டு. தாமும் இன்னா செய்வ ராயின், சால்பா லொருபயனு மில்லையென்பதாம். இவை ஐந்து பாட்டானுஞ் சிறப்பு வகையாற் கூறப்பட்டது.

### (அ) இன்மை யொருவற் கிளிவன்று சால்பென்னும் திண்மை யுண்டாகப் பெறின்

(இ-ள்) சால்பு என்னும் திண்மை உண்டாகப் பெறின்—சால் பென்று சொல்லப்படும் வலியுண்டாகப் பெறின்; ஒருவற்கு இன்மை இளிவு அன்று—ஒருவனுக்கு நல்குரவு இளிவாகாது.

தளராமை நாட்டுதலின், வலியாயிற்று. இன்மையான் வருவதனை 'இன்மை'தானாக உபசரித்துக் கூறினார். சால்புடையார் நல்கூர்ந்த வழியும் மேம்படுதலுடைய ரென்பதாம்.

### (கூ) ஊழி பெயரினுந் தாம்பெயரார் சான்றாண்மைக் காழி யெனப் படுவார்

(இ-ள்) சான்றாண்மைக்கு ஆழி எனப்படுவார் — சால்புடைமை யாகிய கடற்குக் கரையென்று சொல்லப்படுவார்; ஊழி பெயரினும் தாம் பெயரார்—ஏனைக் கடலுங் கரையுள் நில்லாமற் காலந்திரிந்தாலும் தாம் திரியார்.

சான்றாண்மையது பெருமைதோன்ற அதனைக்கடலாக்கியும், அதனைத் தாங்கிக்கொண்டு நிற்றலின் அஃது உடையாரைக் கரையாக்கியுங் கூறினார். "பெருங்கடற் காழியனையன் மாதோ"* என்றார் பிறரும். ஏகதேச உருவகம்.

---

* புறநானூறு—௩௩0.

(ம) சான்றவர் சான்ருண்மை குன்றி னிருநிலந்தான்
 ருங்காது மன்னுே பொறை

(இ—ள்) சான்றவர் சான்ருண்மை குன்றின்—பல குணங்களானு நிறைந்தவர் தம்தன்மை குன்றுவாராயின்; இருநிலந்தான் பொறை தாங்காது—மற்றை யிருநிலந்தானுந் தன் பொறையைத் தாங்காதாய் முடியும்.

தானுமென்னும் எச்சவும்மை விகாரத்தால் தொக்கது. அவர்க்கு அது குன்ருமையும் அதற்கு அது தாங்கலும் இயல்பாகலான், அவை யெஞ்ஞான்று முளவாகா வென்பது தோன்ற நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. ஓகாரம் அசை. இதற்கு இருநிலம் பொறை தாங்குவது சான்றவர் துணையாக வருதலான் அதுவும்○ அது△ தாங்கலாற்ருதென் றுரைப்பாரு முளர். இவை மூன்று பாட்டானும் அவற்ருல் நிறைந்தவரது சிறப்புக் கூறப்பட்டது.

---

## அதிகாரம் — க0உ

## நாணுடைமை

---

[அஃதாவது, மேற்சொல்லிய சால்பு பண்பு முதலிய குணங்களால் உயர்ந்தோர் தமக்கொவ்வாத கருமங்களில் நாணுதலுடையராந் தன்மை. அதிகார முறைமையும் இதனுனே விளங்கும்.]

(க) கருமத்தால் நாணுதல் நாணுத் திருநுதல்
 நல்லவர் நாணுப் பிற

(இ—ள்) நாணுக் கருமத்தால் நாணுதல்—நன்மக்கள் நாணுவது இழிந்த கருமங் காரணமாக நாணுதல்; பிறதிருநுதல் நல்லவர் நாணு—அஃதன்றி மன மொழி மெய்களது ஒடுக்கத்தான் வருவனவோவெனின், அவை அவர் அளவல்ல அழகிய நுதலினையுடைய குலமகளிர் நாண்கள்.

பிற குலமகளிர் நாண் என்றதனுன் ஏனையது நன்மக்கள் நாண் என்பதும்; நாணுத லென்றதனுற் கருமத்த திழிவும் பெற்ரும். திருநுதல் நல்லவரென்பது புகழ்ச்சிக் குறிப்பு. ஏதுப்பன்மைபற்றிப் பிற* என்ருர். இனி அற்றமறைத்தன் முதலியன பொதுமகளிர் நாணே டொக்குமென் றுரைப்பாரு முளர்.+ அவர்க்கு நாண் கேடுபயக்குமென விளக்கப்பட்டமையானும், அவர் பெயராற் கூறப்பட்டாமையானும் அஃது உரையன்மை அறிக.

---

○ நிலம். △ பொறை.

* மனவொடுக்கம் மொழியொடுக்கம் மெய்யொடுக்கம். + மணக்குடவர்.

(உ) ஊணுடை யெச்ச முயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணுடைமை மாந்தர் சிறப்பு

(இ—ள்) ஊண் உடை எச்சம் உயிர்க்கு எல்லாம் வேறு அல்ல—ஊணும் உடையும் அவை யொழிந்தனவும் மக்களுயிர்க் கெல்லாம் பொது; மாந்தர் சிறப்பு நாண் உடைமை—நன்மக்கட்குச் சிறப்பாவது நாணுடைமையே, அவையல்ல.

ஒழிந்தன உறக்கமும் அச்சமுங் காமமும். 'சிறப்பு' : அவ்வுயிர்களின் வேறுபாடு. அச்சமென்று பாடம் ஓதுவாரு முளர்.

(ந) ஊனைக் குறித்த வுயிரெல்லா நாணென்னு
நன்மை குறித்தது சால்பு

(இ—ள்) உயிரெல்லாம் ஊனைக் குறித்த—எல்லா வுயிர்களும் உடம்பினைத் தமக்கு நிலைக்களனாகக் கொண்டு அதனைவிடா; சால்பு நாண் என்னும் நன்மை குறித்தது—அதுபோலச் சால்பு நாணென்னு நன்மைக் குணத்தைத் தனக்கு நிலைக்களனாகக் கொண்டு அதனை விடாது.

உடம்பென்பது சாதியொருமை△ நன்மை – ஆகுபெயர். உயிர் உடம்போடு கூடியல்லது பயனெய்தாதவாறு போலச், சால்பு நாணோடுகூடி யல்லது பயனெய்தா தென்பதாம். ஊணைக்குறித்த என்று பாடம் ஓதுவாரு முளர். ●

(ச) அணியன்றோ நாணுடைமை சான்றோர்க் கஃதின்றேற்
பிணியன்றோ பீடு நடை

(இ—ள்) சான்றோர்க்கு நாண் உடைமை அணி அன்றோ—சான்றோர்க்கு நாணுடைமை ஆபரணமாம்; அஃது இன்றேல் பீடு நடை பிணி அன்றோ—அவ்வாபரண மில்லையாயின் அவர் பெருமிதத்தையுடைய நடை கண்டார்க்குப் பிணியாம்.

அழகுசெய்தலின் 'அணி'யென்றும், பொறுத்தற்கு அருமையிற் 'பிணி' யென்றுங் கூறினார், ஓகார இடைச் சொற்கள் எதிர்மறைக்கண் வந்தன. இவை மூன்று பாட்டானும் அதன் சிறப்புக் கூறப்பட்டது.

(ரு) பிறர்பழியுந் தம்பழியு நாணுவார் நாணுக்
குறைபதி யென்னு முலகு

△ சாதியொருமை யாவது. ஒருசொல் ஒருமையீறு தோன்ற நின்றும் தோன்றாது நின்றும் பின் ஒருமைப் பன்மை வினையீறாக மேல்வந்து முடிக்குஞ் சொற்களுமின்றித் தானே பன்மைப் பொருளுணர்த்துவது. ●மணக்குடவர்.

(இ—ள்) பிறர்பழியும் தம்பழியும் நாணுவார்—பிறர்க்கு வரும் பழி யையுந் தமக்குவரும் பழியையும் ஒப்பமதித்து நாணுவாரை; உலகு நாணுக்கு உறைபதி என்னும்—உலகத்தார் நாணுக்கு உறைவிடமென்று சொல்லுவார்.

ஒப்ப மதித்தல்—அதுவுந் தமக்கு வந்ததாகவே கருதுதல். அக் கருத் துடையார் பெரியராகலின், அவரை உயர்ந்தோர் யாவரும் புகழ்வரென்பதாம். இதனால் அதனையுடையாரது சிறப்புக் கூறப்பட்டது.

(சு) நாண்வேலி கொள்ளாது மன்னோ வியன்ஞாலம்
பேணலர் மேலா யவர்

(இ—ள்) மேலாயவர் — உயர்ந்தவர்; வேலி நாண் கொள்ளாது— தமக்கு ஏமமாக நாணினைக் கொள்வதன்றி; வியன் ஞாலம் பேணலர்— அகன்ற ஞாலத்தைக் கொள்ள விரும்பார்.

பழிபாவங்கள் புகுதாமற் காத்தலின், 'வேலி'யென்றார். நாணும் ஞால மும் தம்முள் மாறுயவழி அந்நாணினைக் கொள்வதல்லது அவை புகுது நெறியாய ஞாலத்தினைக் கொள்ள விரும்பா ரென்பதாம். மன்னும் ஓவும் அசை. நாணாகிய வேலியைப் பெற்றல்லது ஞாலம் பெறவிரும்பா ரென்றுரைப்பாரு முளர்.

(எ) நாணா லுயிரைத் துறப்ப ருயிர்ப்பொருட்டா
னுண்டுறவார் நாணாள் பவர்

(இ—ள்) நாண் ஆள்பவர்—நாணினது சிறப்பறிந்து அதனை விடாது ஒழுகுவார்; நாணால் உயிரைத் துறப்பர் — அந்நாணு முயிருந் தம்முள் மாறுயவழி நாண்சிதையாமற் பொருட்டு உயிரை நீப்பர்; உயிர்ப் பொருட்டு நாண் துறவார்—உயிர் சிதையாமற் பொருட்டு நாணினை நீக்கார்.

உயிரினும் நாண் சிறந்ததென்பதாம். இவை இரண்டு பாட்டானும் அவர் செயல் கூறப்பட்டது.

(அ) பிறர் நாணத் தக்கது தானுணுயி
னறநாணத் தக்க துடைத்து

(இ—ள்) பிறர் நாணத்தக்கது தான் நாணுன் ஆயின்—கேட்டாருங் கண்டாரு நாணத்தக்க பழியை ஒருவன் தான் நாணுது செய்யுமாயின்; அறம் நாணத்தக்கது உடைத்து—அந் நாணுமை அவனை அறம்விட்டு நீங்கத் தக்க குற்றத்தினை யுடைத்து.

தானெனச் செய்வானைப் பிரிக்கின்று ராகலின் பிற ரென்றார். நாணோடு இயைபில்லாதானை அறஞ்சாரா தென்பதாம்.

(௯) குலஞ்சுடுங் கொள்கை பிழைப்பி னலஞ்சுடு
நாணின்மை நின்றக் கடை

(இ-ள்) கொள்கை பிழைப்பின் குலம் சுடும்—ஒருவனுக்கு ஒழுக்கம் பிழைக்குமாயின் அப்பிழைப்பு அவன் குடிப்பிறப் பொன்றையுங் கெடுக்கும்; நாணின்மை நின்றக்கடை நலம் சுடும்—ஒருவன்மாட்டு நாணின்மை நின்றவழி அந்நிலை அவன் நலம் யாவற்றையுங் கெடுக்கும்.

நிற்றல்-ஒருபொழுது நீங்காமை. நலம் சாதியொருமை யாகலின், பிறப்பு, கல்வி, குணம், செயல், இனமென் றிவற்றான் வந்தனவெல்லாங் கொள்ளப்படும். ஒழுக்க அழிவினும் நாணழிவு இறப்பத் தீ தென்பதாம்.

(௰) நாணகத் தில்லா ரியக்க மரப்பாவை
நாணா லுயிர் மருட்டி யற்று

(இ-ள்) அகத்து நாண் இல்லார் இயக்கம்—தம் மனத்தின்கண் நாணில்லாத மக்கள் உயிருடையார்போன் றியங்குகின்ற இயக்கம்; மரப் பாவை நாணால் உயிர்மருட்டியற்று—மரத்தாற் செய்த பாவை இயந்திரக் கயிற்றினாய தன் இயக்கத்தால் உயிருடைத்தாக மயக்கினாற் போலும்.

கருவியே கருத்தாவாயிற்று. நாணில்லாதமக்களியக்கம் நாணுடைய பாவையியக்கம் போல்வதல்லது உயிரியக்க மன்றென்பதாம். இவை மூன்று பாட்டானும் நாணில்லாரது இழிவு கூறப்பட்டது.

---

## பரிமேலழகர்

# உரைநலம் வியத்தல்

★

*"குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்*
*மிகைநாடி மிக்க கொளல்"* —திருக்குறள்.

"காய்தலுவத்த லகற்றி யொருபொ ருட்கண்
ஆய்வ தறிவுடையார் கண்ணதே — காய்வதன்கண்
உற்றகுணம் தோன்ரு தாகும் உவப்பதன்கண்
குற்றமும் தோன்ரு கெடும்" —அறநெறிச்சாரம்

"ஒரு நூலுக்கோ, அல்லது அதன்கண் உளள பாவுக்கோ உரை காணப் புகுவார், அவற்றை இயற்றிய ஆசிரியன்றன் கருத்துக் குங் கொள்கைக்கும் மாருகாமல் உரைகாணலே வாய்மையாகு மன்றித் தமது கொள்கைக் கிசைய ஆசிரியன் கருத்தை மாற்றி உரைகாணல் வாய்மையாகாது. அவர் தமது கொள்கையை நாட்டல் வேண்டினுராயின் தாம் அதற்கென்று ஒரு புது நூல் எழுதுதலே முறையாம்" —மறைமலை அடிகளார்.

### தோற்றுவாய்

அமிழ்தனைய நம் தமிழ்மொழி சீரிய இலக்கண நெறியா னும் தீவிய இலக்கியப் பொருள் துறையானும் குறைவின்றி நிறைந்து நிற்கும் உயர்தனிச் செம்மொழி என்பது ஆராய்ச்சி யுடை அறிஞர் யாவர்க்கும் வேறுபாடின்றி ஒப்ப முடிந்தது ஒன்று. அம்மொழியினை, மக்களுடன் உரையாடிக் கருத் துணர்த்தற்கும் எழுதிப் பொருள் புணர்த்தற்கும் சிறந்த ஒரு கருவியாய தாய்மொழியாகப் பெற்றமை தமிழ் மக்கள்தம் பெற லரும் தவப்பயனுமன்றே! இன்று நம் மொழியில் ஒப்புயர் வற்று ஒளிகான்று இருள்நீக்கிப் பொலிந்து மிளிராநிற்கும் தனித்தமிழ் முதல்நூல் தொல்காப்பியச் செழுமறையாம். அச் செழுமறையின் நெறி வழாது நின்று, மக்கள் வாழ்விற்கு வேண்டும் பொருணலங்களைக் குறைவின்றித் தெளிந்து துணிந்து தீர்ந்த வகையான் தந்து நிற்கும் தெய்வச் செழுமறைநூல் செந் நாப் போதார் நாமலர்ந்து தேன்பிலிற்றும் **திருக்குறள்.** இஃது **உலகிற்கு ஓர் பொதுமறை. தமிழுக்கு ஒரு சிறப்பியல் செழுமறை.**

இம் மறை, பல்வேறு கருத்து வேறுபாடுடைய நாட்டு மக்களுளத்தும் பலப்பல வேறுபாடுடைய மொழிகூறும் உலக மக்கள் உளத்தும் நிகரற்று நின்று, பொருள்வளம் பரப்பி வருதல், அவ்வம் மக்கள் தம் கருத்துத் தெளித்தற்கு இதனை மேற்கோடலானும் தத்தம் மொழியில் பெயர்த்து எழுதியிருத்தலானும் நன்கு புலனும். இங்ஙனம் யாவர் கருத்தும் கவர்ந்து ஈர்த்து நின்றமையான் அன்றோ, பற்பல பாவலரும் நாவலரும் இந்நூல் தோன்றிய அன்றுதொடங்கி இன்றுகாறும் எவ்வகையானும் இதனைப் பேணிப் போற்றுவாராயினர். இம்மறைபோன்று வேறு ஒரு நூல் யாவருளத்தும் ஊன்றி நின்று தனி அரசு செலுத்தக் காண்கின்றேமல்லம். வள்ளுவர் காலத்து உடன் வாழ்ந்தோரும் பின்வழி வந்தோரும் தாம் இயற்றிய நூலினும் உரையினும் அவர்தம் கருத்தின் நிறைவாய குறள் பொருள் வளத்தைச் சொல்லாகவும் தொடராகவும் அடியாகவும் பாவாகவும் எடுத்து இட்டு நிரப்புவாராயினர். அதுவன்றியும், செஞ்சொற்புலவர் பலர் இப்பெருநூலின் சொற்பொருட் செழுமைக்கண் உள்ளம் ஆழ்ந்து குளித்து ஒளிபெற்று அவ்வொளித்துணை கொண்டு பிறர்கரும் இதன்பெற்றி விளக்கிக்காட்டும் வேட்கையராய் உரைவகுத்துப் போந்தனர். அம்முறையில் பண்டு உரை வகுத்தார் பதின்மர் என ஒரு பழம்பாடல் கொண்டு அறிகின்றேம். அவ்வுரையுட் சிலவும் இற்றைநாள் அச்சு ஏறிவந்து ஏடாய் உலவுகின்றன. அம்மட்டோ, இற்றைநாள் புலவர் பலருடை உரைகளும் வந்து பரந்து உலவக் காண்கின்றேம். பண்டுதோன்றிய உரை பலவற்றுள்ளும் சுருங்குதல், விளங்குதல், இனிதாதல், ஓசையுடைமை, ஆழமுடைத்தாதல் முதலிய அழகான் நிரம்பிக் குறள்போன்றே சிறந்து அதன் பொருளை அணைத்து அணைத்து விரித்து நிற்பது பரிமேலழகர் இயற்றிய உரையாம். அவ்வுரையின் நலங்கள் பலவற்றுள் சிலவற்றைச் சுட்ட எழுந்தது இக் கட்டுரை.

## பரிமேலழகர் உளப்பாங்கு

ஓர் ஆசிரியருடைய உளத்து இயல்பு இன்னது என்று அறியப் புகுவார்க்கு இன்றியமையாது வேண்டற்பாலது காய்தலுவத்தல் அற்ற ஒருபாற்கோடா உளச் செப்பம். "சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா உட்கோட்டம் இன்மை பெறின்" என்னும் தெய்வத் திருமாமறை யாவர் உளத்தும் நீங்காது நிற்பது நன்று. அச் செப்பம்சார்ந்த நெஞ்சினராய், அக் காலத்து நீர்மையினை இலக்கண இலக்கிய வழக்கியல் நெறியும், துறையும், முறையும்கொண்டு நுனித்தறிதல் வேண்டும். எந் நூலும் உரையும் அவ்வக்கால இயல்புக்கு ஏற்ற பண்புடைய

வாய் அமைதல் இயல்பே;அவற்றின் குணமும் குற்றமும் நாடிப் பின் அவற்றுள் மிகை ஆய்ந்து மிக்ககொளல் அன்றோ முறைமை. இருநோக்கும் செவ்விய நோக்காதல் வேண்டும். எவ்வுரைக் கண்ணும் ஐயமோ திரிபோ மாறுபாடோ இருத்தலும் ஒல்லும். அவையெல்லாம் பண்டைப் பேராசிரியர்க்கு ஓரொருகால் கொள்கைப் பிடிப்பால் நேர்ந்தனவே. எனினும், அத்தகவுடைப் பெருமக்கள், ஆழ்ந்தகன்ற அறிவுத்துணை கொண்டு அளவை நூல் நெறியும் நேர்மையும் இகத்தலிலராய்ச் சென்றுளமை பெரிதும் போற்றற்குரித்து. உரையாசிரியர்கள் பலரும் எழுதியவற்றுள் உரைமறுப்புக்கள் காணுகின்றோம். ஆண்டு அவர்கள் எல்லாரும் உரைமறுப்புக் கூறினரே அன்றிக் காய்ந்த காழ்ப்பால் ஆள்மறுப்புக் கூறினரல்லர்! அவ்வுரை மறுப்புக்களும் இன்னீர்மையுடன் நிகழ்கின்றன! உரையிற் கருத்து அமைதிகண்ட இடத்து அறிவானும் மேதகவானும் அவ்வவ்வுரைகளைத் தழுவிச் சென்றுளார். பரிமேலழகியாரும் இக்கடைப்பிடியினின்றும் சிறிதும் பிறழ்ந்தாரல்லர். நம் தெய்வச் செழுமாமறைக்கு உரைவகுக்கப் புகுந்த செயல் மாண்பு ஒன்றே அவர்தம் உயர்வுள்ளும் உள்ளப் பீடுகாட்டி நிற்கின்றது. அன்றியும், அவர் வள்ளுவரைப் பற்றிக்கூறிய வாய்மொழியும் இதற்கு அரண்செய்யுமாதலின் அவை சில குறித்துச் செல்லுகின்றேன்.

அவை: "எல்லா நூல்களினும் நல்லன எடுத்து எல்லார்க்கும் பொதுப்படக் கூறுதல் இவர்க்கு இயல்பாகலின் ஈண்டும் பொதுப்பட 'நூலோ'ரென்றும், அவரெல்லார்க்கும் ஒப்பமுடிதலான் இது'தலை'யாய அறம் என்றும் கூறினர்" (322)."இறப்ப வருவழி இளிவந்தன செய்தாயினும் உய்க என்னும் வடநூன் முறைமையை மறுத்து உடம்பினது நிலையின்மையையும் மானத்தினது நிலையுடைமையையும் தூக்கி அவை செய்யற்க என்பதாம்" (961) என்னும் செஞ்சொற்களாம். பிறராயின் தம் கருத்தே கூறி இவை போல்வனவற்றைக் கூறுதும் நெகிழ விடுவரன்றோ! "உடலோடொழியும் சாதியுயர்ச்சியினும், உயிரோடு செல்லும் கல்வி*யுயர்ச்சி சிறப்புடைத் தென்பதாம்"(409) என்னும் தீஞ்சொற்றொடரும் அவர் உளம் தெளிதற்குக் கருவியாதலுடைத்து. அன்றியும், பிறர் உரையைத் திரிவுகாட்டிக் காரணத்தான் மறுத்தலும் பலவிடத்து மருது தழீஇச் செல்லலும் அவர்தம் உளச் செப்பத்தையும் பெருமையையும் காட்டுவனவாம். நிற்க;

* குறள் - 398.

அன்புடைமை, ஒப்புரவறிதல், வாய்மை, கண்ணோட்டம், சான்றாண்மை, நாணுடைமை என்னு மதிகாரங்களின் உரையகத்தமர்ந்த நலன்கள் சிறப்புவகையானும் பிற சிலபல நலங்கள் நூலளவில் பொதுவகையானும் காண்பது நூல்கற்றற்குத் துணையும் வாழ்க்கைச் செலவிற்குப் புணையுமாம் என்னும் நன்னர் உளத்தால் அமைவது இச்சிறுமொழித் தொகுப்பு.

## 1. அதிகார அடைவும் தோற்றுவாயும்

தாம் உரைகூறிச் செல்லும்பொழுது, 1. அதிகாரத்தின் இயைபு கூறலும் 2. குறித்தலும், 3. அதிகாரப்பொருள் கருத்துரைக்கு மாற்றான் குறித்தலும், 4. விளக்கலும், 5. தலைப்பின் இலக்கணக் குறிப்புக் கூறலும், 6. முற்றோற்றுவாய் செய்ததனை விரித்துரைத்தார் என்றலும், 7. பகுத்துரைத்தார் என்றலும், 8. முற்றுப் பெருமையின் எதிர்மறை முகத்தாற் கூறுகின்றார் என்றலும், 9. சிறப்புப்பற்றி விரித்துரைத்தார் என்றலும், 10. சொற்பெயர்க் காரணம் சுட்டலும், வேண்டுவ கூட்டி எழுதலும், 11. அதிகாரப் பாடற்கு இயைபுகாட்டலும் இன்ன பிறவும் இவர் தம் தோற்றுவாய் தெரிக்கும் உரை இயல்புகள்.

**அன்புடைமை:—** 'அஃதாவது, அவ்வாழ்க்கைத் துணையும் புதல்வரும் முதலிய தொடர்புடையார்கட் காதலுடையனாதல்* அதிகார முறைமையும் இதனானே விளங்கும். இல்லறம் இனிது நடத்தலும் பிறவுயிர்கண்மேல் அருள்பிறத்தலும் அன்பின் பயனாகலின், இது வேண்டப்பட்டது. வாழ்க்கைத்துணைமேல் அன்பில்வழி இல்லறம் இனிது நடவாமை, "அறவோர்க் களித்தலும் அந்தணரோம்பலும், துறவோர்க்கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின், விருந்தெதிர்கோடலுமிழந்த என்னை" ○ என்பதனானும் அதனாலருள்பிறத்தல் "அருளென்னும் அன்பீன்குழவி" △ என்பதனானும் அறிக.'

**சான்றாண்மை:—** 'அஃதாவது, பல குணங்களானும் நிறைந்து அவற்றை ஆடற்றன்மை. பலகுணங்களானும் என்பது சாலுதற்றொழிலாற் பெறப்படுதலின், அவற்றையென்பது வருவிக்கப்பட்டது. பெருமையுளடங்காத குணங்கள் பலவற்றையும் தொகுத்துக்கொண்டு நிற்றலின் இஃது அதன் ● பின் வைக்கப்பட்டது.' என்பன அவற்றுட் சில: பிறநலங்கள், அழுக்காறாமை, கல்வி, பண்புடைமை, வினைசெயல்வகை, கல்லாமை, கண்ணோட்டம் முதலிய அதிகாரங்களிற் காண்க.

* புறம்-5. ○ சிலப்பதிகாரம், கொலைக்களக்காதை, 71-73.
△ திருக்குறள்-757. ● பெருமை.

பாடலியைபு ஒவ்வோர் அதிகாரத்தும் பல்வேறு காரணத்தான் காட்டப் பெற்றுள்ளது. அது சிறிது போக்கி ஏற்ற இடத்து விளக்கப்படும்.

## 2. உரைப்பொருள் பாகுபாடு

### 1. காரணம்காட்டிப் பொருள்விரித்தல்:-

அன்பிலார்-அன்பிலாதார்; எல்லாம்- (பிறர்க்குப் பயன் படாமையின்) எல்லாப் பொருளானும்; தமக்கு-தமக்கே; உரியர்-; அன்புடையார்-; என்பும்-(அவற்றானே யன்றித்தம்) உடம்பானும்; பிறர்க்கு உரியர்-; [பொருள் வளத்துக்கு வேண்டும் பிறைக்குறிக்குட்பட்ட சொற்களும், விகாரத்தால் தொக்க ஆன் உருபுகளும், பிரிநிலை ஏகாரமும், ஆகுபெயர்ப் பொருளும் கொண்டு பொருள் எழுதியமை காண்க. என்பும் என்றதன் கணுள்ள இறந்தது தழீஇய எச்ச உம்மையும் பிறர்க்குரியர் என்ற தொடரும் இவ்வகைப் பொருள் செய்யத்துணை நின்றன] என உரைத்தலும்,

'என்பு' இலதனை — என்பில்லாத உடம்பை; வெயில் போலக் காயும் — வெயில் காய்ந்தாற்போலக் காயும்; அன்பிலதனை அறம் — அன்பில்லாத உயிரை அறக்கடவுள். 'என்பிலது' என்றதனால் உடம்பென்பதூஉம், 'அன்பில' தென்றதனான் உயிரென்பதூஉம் பெற்றாம். வெறுப்பின்றி எங்கும் ஒரு தன்மைத்தாகிய வெயிலின்முன் என்பில்லது தன்னியல்பாற் சென்று கெடுமாறுபோல அத்தன்மைத்தாகிய அறத்தின்முன் அன்பில்லாத உயிர் தன்னியல்பாற் கெடும் என்பதாம். அதனைக் காயுமென வெயிலறங்களின் மேலேற்றினார்; அவற்றிற்கும் அவ்வியல்புண்மையின். இவ்வாறு "அல்லவை செய்தாற்கறம் கூற்றம்" எனப் பிறரும் கூறினார் என உரைத்தலும், **கண்ணோட்டம்** என்னும் அதிகாரத்துக்

> *"கண்ணிற் கணிகலம் கண்ணோட்டம் அஃதின்றேல்*
> *புண்ணென் றுணரப் படும்"*

என்ற குறட்குத் தெளிபொருள் உரைக்குமிடத்து, "வேறணிகலம் இன்மையிற் கண்ணிற் கணிகலம் என்றும், கண்ணைத் தோன்றினும் நோய்களானும் புலன் பற்றலானும் துயர் விளைத்தல் நோக்கிப் புண்ணென் றுணரப்படுமென்றும் கூறினார்" என உரைத்தலும், **சான்றாண்மை** என்னுமதிகாரத்துக்

"கடனென்ப நல்லவை யெல்லாம் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு"

என்னும் குறட்கீழ்த்தெளிவுரையில், "சில குணங்களிலவாய வழியும் உள்ளன செய்து கொண்டனவாயவழியும் சான்றாண்மை யென்னும் சொற்பொருள் கூடாமையின் நூலோர் இவ் ஏதுப் பெயர் பற்றி அவரிலக்கணம் இவ்வாறு கூறுவர் என்பதாம்" என உரைத்தலும் கண்டு மகிழ்தற்குரியன. பிறவும் பல காண்க.

2. உரைக்கு மேற்கோள் காட்டல்:-

"அறத்திற்கே அன்புசார் பென்ப வறியார்
மறத்திற்கு மஃதே துணை."

அன்பு துணையாவது அறத்திற்கே யென்று சொல்லுவர் சிலர் அறியார்; ஏனைமறத்திற்கும் அவ்வன்பே துணையாவது. "ஒருவன் செய்த பகைமை பற்றி உள்ளத்து மறநிகழ்ந்துழி அவனை நட்பாகக் கருதி அவன்மேலன்பு செய்ய அது நீங்குமாகலின் மறத்தை நீக்குதற்குந் துணையாமென்பார். மறத்திற்கு மஃதே துணையென்றார்." * "துன்பத்திற்கி யாரே துணையாவார்" என்புழிப்போல.மறத்தைச் செய்தற்கும் அவ்வன்பே துணையென்றும் மறக்கருணையான் ஒறுத்துத்திருத்தற்கும் அஃதே துணையென்றும் பிறர் இக்குறட்கு உரைகூறக் காண்கின்றோம். அன்பின் சிறப்பைக் கூறவந்த இயைபுடையது இக்குறள். அன்பு அறம் செய்தற்கே துணையாம் என்பார், அவ்வன்பே மறம் தவிர்தற்கும் புணையாவது அறியாராவர். அறம் என்பது நல்லன புரிதலும் அல்லன தவிர்தலுமாம். தெய்வப்புலவர் திருவள்ளுவனார் விதித்தல் விலக்கல் என்ற இருவகையானும் அறம்புரியுமாறு நியமிக்கும் கடப்பாட்டினராதலை நூலகத் தமைந்த அதிகாரங்களான் அறிகின்றோம். இருகூற்றானும் செய்யப்படும் அறத்திற்கு அன்பு துணைபோவதாய் அமைவது தேற்றமாகவும் அதனை ஒரு கூற்றினமைந்த நன்று ஆற்றும் அறத்திற்கே உரித்தெனப் பிரித்துரைப்பார், இருபுடையும் நடுவுநின்று பாராது ஒருபுடையே நோக்குவா ராவர். அன்றியும், அவ்வுரை அன்பின் சிறப்புரைத்த தாகாது. அன்பின் இயல்புரைத்ததெனின், அதுவும் பொருந்தாது, மறத்திற்குச் சார்பாவது அவாவாகுமேயன்றி, என்பானும் பிறர்க்குரிய ராதற்குரிய அன்பாகாது. தொடர்புடையார் கட்காதல் என உரைக்கப்படுதலானும் யாதொரு இழுக்குமின்று: அக்காதல் பிறர்க்கு மறம் செய்யுமாறு

* குறள்—1299.

தூண்டாது ஆதலின். தூண்டுமேல் அதனை அவா எனச் சொல்லிவிடுக. அன்பன்றே முதிர்ந்து முதிர்ந்து அருளாவது; அறம் செய்யுமாறு விதித்துச் செல்லும் ஆசிரியர், அன்பின் இயல்பும் சிறப்பும் அதனாலாம் முழுப்பயனும் அன்றே சுட்டுவர். மறுதலையாகப் பாவத்திற்குத் துணைபோமென்று கூறுவாரென்று நினைத்தற்கே இடனின்று. மறம் என்பது முற்சுட்டிய மறக் கருணையாமேல் அஃதும் அன்பேயாமென்று கூறியொழிக. அன்றி, மறம், வீரமாமெனின் அவ்வீரம் கொலைக்கு ஏதுவாமேல் அன்பொடுபட்டதன்று. அருஞ்செயற்கு ஏதுவாமேல் 'ஏனை மறம்' என்று கூறிய மறுதலைப் பொருண்மையொடு மாறுபடும் என்க. இத்துணையும் கூறியவாற்றான் பொருந்துமுறை இன்ன தென்பது தெளியப்படும்.

*"ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்(கு)*
*ஆழி எனப் படுவார்"*

'சான்றாண்மையது பெருமைதோன்ற அதனைக் கடலாக்கியும், அதனைத் தாங்கிக்கொண்டு நிற்றலின் அஃது உடையாரைக் கரையாக்கியுங் கூறினார்; 'பெருங்கடற் காழியனையன் மாதோ' என்றார் பிறரும். ஈண்டு ஆழியென்ற சொற்குக் கரையென உரைகூறியமையும் அவ்வுரைப்பொருள் நிறுத்தற்குக் காட்டிய மேற்கோளில் அஃது கரையென்றே பொருள்படுமாறும் அறிந்து மகிழ்தற்குரியன.

*"வாய்மை யெனப்படுவ(து) யாதெனின் யாதொன்றும்*
*தீமை இலாத சொலல்"*

இக்குறளில், எனப்படுவது என்ற சொற்கு என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது என்று உரைகூறி அவ்வுரைக்கு மேற்கோளாய், "ஊரெனப்படுவ துறையூர்" என்ற வழக்கியல் தொடர் காட்டி உரையை அமைத்தல் நன்கு பொருந்துமாறு உடைத்து. இவற்றையொட்டி மேலும் ஓரிடம் காண்போம், "தன்னெஞ்சு அறிவது........"(293) என்னுங் குறளுரையில், நெஞ்சுகரியாதல், "கண்டவரில்லென உலகத்துளுணராதார் — தங்காது தகைவின்றித் தாஞ்செய்யும் வினைகளுள், நெஞ்சறிந்த கொடியவை மறைப்பினும் மறையாவாம், நெஞ்சத்திற் குறுகிய கரியில்லை யாதலின்"* என்பதனானும் அறிக' என உரைக்குமிடத்து மேற்கோள் இயைந்து பொருளை விளக்கி நிற்றல் அறிகின்றோம்.

* கலி. நெய்தல்—8.

3. சொல்லின் கருப்பொருள்:—

"தவிருந்தன்மையவல்ல என்பது 'கடப்பா'டென்னும் பெயரானே பெறப்பட்டது." என்னும் பகுதி கடப்பாடு என்ற சொல்லில் உறை கருப்பொருள்காட்டி நிற்கின்றது. (211) "காணப்படுவது உள்ளதாகலின் உண்டாமெனை உரைக்கப் பட்டது;" என்பதூஉமது. (298)

*"எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்*
*பொய்யா விளக்கே விளக்கு*

"உலகத்தார் விளக்காவன—ஞாயிறு, திங்கள், தீ யென்பன. இவற்றிற்குப் போகாத இருள் போகலின் 'பொய்யா விளக்கே விளக்' கென்றார்." என்றவிடத்தும் சொற்பொருள் விளக்கம் பெற்று நிற்கின்றது.

**கண்ணோட்டம்**:—"அஃதாவது, தன்னோடு பயின்றாரைக் கண்டால் அவர் கூறியன மறுக்கமாட்டாமை. இஃது அவர்மேற் கண்சென்றவழி நிகழ்வதாகலின் அப்பெயர்த்தாயிற்று," என்பதூஉம் சொற்பொருள் விளக்கமே. "அந்தணர் என்பது அழகிய தட்பத்தினை உடையாரென ஏதுப்பெயராகலின் அஃது அவ்வருளுடையார்மேலன்றிச் செல்லாது என்பது கருத்து" என்பதூஉமது.(30) "நிற்றல்— ஒருபொழுதும் நீங்காமை" - என்பதூஉம் (1019) சொற்பொருள் விளக்கமாதல் காண்க.

4. விளக்கம் வரைதல்:—

*"ஒப்புரவி னால்வரும் கேடெனின் அஃதொருவன்*
*விற்றுக்கோட் டக்க துடைத்து"*

தன்னை விற்றுக் கொள்ளப்படுவதொரு பொருளில்லை யன்றே? இஃதாயின் அதுவும் செய்யப்படு மென்றது புகழ் பயத்தல் நோக்கி. இதனால் ஒப்புரவினாற் கெடுவது கேடன்றென்பது கூறப்பட்டது. ஈண்டு நெஞ்சழியா அறக்கடைப் பிடிப்புத் தெருட்டப்படுகின்றது.

"மெய்யுணர்த்துவன வற்றை'மெய்'யென்றார். அவையாவன—தங்கண்மயக்க மின்மையின் பொருள்களை யுள்ளவாறுணர வல்லராய்க் காமவெகுளிகளின்மையின் அவற்றை யுணர்ந்தவாறேயுரைக்கவும் வல்லராய இறைவர் அருளான் உலகத்தார் உறுதியெய்தற் பொருட்டுக் கூறிய ஆகமங்கள். அவை யெல்லாவற்றினும் இஃது ஒப்பமுடிந்தது என்பதாம். இவை மூன்று பாட்டானும் இவ்வறத்தினது தலைமை கூறப்பட்டது" என,

*"யாமெய்யாக் கண்டவற்று ளில்லை யெனைத்தொன்றும்*
*வாய்மையி னல்ல பிற"*

என்னும் குறட்கு எழுதப்பட்டிருக்கும் விளக்கம் பொருட் பொலிவும், தெளிவும் உடையதாய்ப் பரிமேலழகியாரின் தீர்ந்து தெளிந்து துணிந்து நிற்கும் அறிவைத் தெரித்துக் காட்ட வல்லதன்றோ !

*"புறந்தூய்மை நீரா னமையும் அகந்தூய்மை*
*வாய்மையாற் காணப் படும்"*

என்ற குறட்கண், "காணப்படுவது உள்ளதாகலின், உண்டா மென்றுரைக்கப் பட்டது. உடம்பு தூய்தாதல்—வாலாமை நீங் குதல்,-மனந்தூய்தாதல்-மெய்யுணர்தல். புறந்தூய்மைக்கு நீரல் தது காரணமில்லாதாற் போல, அகந்தூய்மைக்கு வாய்மை யல் லது காரணமில்லை யென்றவாறாயிற்று. இதனானே துறந்தார்க்கு இரண்டு தூய்மையும் வேண்டு மென்பதூஉம் பெற்றாம்" என உடன்பாட்டினமைந்த குறளின் நுட்பப்பொருளை எதிர்மறை யாற் றெளித்து விளக்கினமையும்: சொற்றொடர்கட்குத் துணி பொருள் தந்தமையும், எச்சப்பொரு ளுரைத்தமையும் உரைக் குரிய இலக்கண நலங்களாம்,

*"நாண்வேலி கொள்ளாது மன்னோ வியன்ஞாலம்*
*பேணலர் மேலா யவர்"*

"பழிபாவங்கள் புகுதாமற்காத்தலின், 'வேலி'யென்றார்—நாணும் ஞாலமும் தம்முள் மாறாயவழி அந்நாணினைக் கொள்வதல்லது அவைபுகுது நெறியாய ஞாலத்தினைக் கொள்ள விரும்பார் என்ப தாம்." ஈண்டு வேலியென்றமைக்குரிய காரணமும், உலகமும் நாணும் தம்முள் மாறாயவழி என்று, ஒன்றுவிட்டு ஒன்று கொளற்கு நேரும் செவ்வியும், ஞாலம் தவிர்ந்து நாணம் பேணற் குக் காரணம் காட்டுவாராய்ப் பழிபாவம் புகுது நெறியாகிய ஞால மென்றலும் உரையழகு தரும் இன்னீர்மைய.

**5. கருத்துரைத்தல்:—**

இக்குறள் இன்னது கூறிற்று என்று சுட்டிப்போதலோடு குறளினின்றும் வேண்டும் செவ்விய பொருள் வெளிப்பட்டு நில்லாவிடத்து அப்பொருளைப் புலனாக்குதலும் உண்டு. "அன் போடியைந்த........."(73) என்னும் குறளிலமைந்த கருத்தினை, 'உடம்போ டியைந்தல்லது அன்பு செய்யலாகாமையின், அது செய்தற்பொருட்டு இத்தொடர்ச்சி உளதாயிற்று என்பதாம். ஆகவே இத்தொடர்ச்சிக்குப் பயன் அன்புடைமை என்றாயிற்று'

என விளங்குமாறு புலப்படுத்தலும், "அன்புற்றமர்ந்த........." (75) என்னும் குறளின் முடிந்த கருத்தாய்த் 'தவத்தால் துன்புற்றெய்தும் துறக்க இன்பத்தினை ஈண்டும் இன்புற்றெய்துதல் அன்பானன்றி இல்லை என்பதாம்' என்றும் அன்பின்சிறப்பாக அஃது இருமை இன்பம் பயத்தலைச் சுட்டலும் உரைநலமாய மைவன. மேலும்,

*"தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு*
*வேளாண்மை செய்தற் பொருட்டு"*

என்னும் செய்யுளின் கருத்தினைத் தெளிக்குமாறுகாண்மின்.அது, பிறர்க்குதவார்தார்போலத் தாமே உண்டற்பொருட்டும் வைத்திழத்தற் பொருட்டுமன்றென்பதாம்" என்று தெரித்தமையாம்,

*"இடனில் பருவத்தும் ஒப்புரவிற் கொல்கார்*
*கடனறி காட்சி யவர்"*

என்பதன்கீழ்ப் "பிறவெல்லாம் ஒழியினும் இஃது ஒழியார்" என்பதூஉம், வாய்மையின் இலக்கணங்கூறும் முதல் இருசெய்யுட் பொருள்களையும் ஒருங்கு சேர்த்துக் கூறுமிடத்து, "இவை இரண்டுபாட்டானும் தீங்கு பயவாத நிகழ்ந்தது கூறலும் நன்மை பயக்கும் நிகழாதது கூறலும் மெய்ம்மையெனவும், நன்மை பயவாத நிகழாதது கூறலும் தீங்குபயக்கும் நிகழ்ந்தது கூறலும் பொய்ம்மையெனவும் அவற்றது(வாய்மை பொய்ம்மையது)இலக்கணம் கூறப்பட்டது" என எழுதுவார், "வாய்மை" என்னும் சொல்லானேயன்றிப் பொய்யாமை எனும் சொல்லானும் ஆசிரியர் வாய்மை அறங்கூறிச்செல்லும் நெறிகூர்ந்தறிந்து அதற்கு ஏற்பப் பொய்யாமையின் இலக்கணமும் உடன்கூட்டிச் சொல்லலும் உரைநலப் பகுதிகளாக நிற்றல் காண்கின்றோமல்லமோ?

*"சால்பிற்குக் கட்டளை யாதெனின் தோல்வி*
*துலையல்லார் கண்ணுங் கொளல்"*

என்னும் குறளின் கருத்தாய், "இழிந்தாரை வெல்லுதல் கருதித் தம்மோடு ஒப்பித்துக்கொள்ளாது தோல்வியான் அவரின் உயர்வராயின், அதனாற் சால்பளவு அறியப்படும் என்பதாம்" என்று கூறலும்,

*"குலஞ்சுடும் கொள்கை பிழைப்பின் நலஞ்சுடும்*
*நாணின்மை நின்றக் கடை"*

என்னும் செய்யுளின், விளக்கமாய் "நலம், சாதியொருமையாகலின் பிறப்பு,கல்வி, குணம், செயல், இனமென்றிவற்றான் வந்தன

வெல்லாம் கொள்ளப்படும். ஒழுக்க அழிவினும் நாணழிவு இறப்பத்தீதென்பதாம்'' என்று கூறலும் கருத்துச்சுட்டி விளக்கும் உரைநல மாண்புகளாம்.

3. பிறிதோருரை கூறலும், பிறருரை தழுவலும்:—

ஒரு செய்யுட்குமுன்தான் கூறிய உரையன்றிப் பிறிதோருரை கூறற்கு இடம் இருப்பின் அதனையும் கூறிச்செல்லுதல் பொருளுண்மைகண்டு கூறவேண்டுமென்ற அவர் நன்னர் நெஞ்சத்து இன்னீர்மைகாட்டி நிற்கின்றது.

*''விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா*
*மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று''*

என்ற குறட்கண், 'சாவாமருந்து–சாவாமைக்குக் காரணமாகிய மருந்து'; எனவுரைத்து, அதனோடமையாது, 'விருந்தின்றியே ஒருகால் தானுண்டலைச் சாவாமருந்தென்பார் உளராயினும் அதனையொழிக என்றுரைப்பினுமமையும்' என்று பிறிதோருரை கூறுமாறு காண்க.

*''புத்தே ளுலகத்து மீண்டும் பெறலரிதே*
*ஒப்புரவி னல்ல பிற''*

என்னும் குறட்கீழ்ப், 'பெறற்கரிது என்று பாடமோதிப் பெறுதற்குக் காரணமரிது என்று உரைப்பாருமுளர்' என்று கூறலும்.

*''பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற*
*செய்யாமை செய்யாமை நன்று''*

என்ற குறட் பொருட்கு விளக்கமாக, 'அடுக்கிரண்டனுள் முதலது இடைவிடாமைமேற்று, ஏனையது துணிவின்மேற்று. பல அறங்களையும் மேற்கொண்டு செய்தற்கருமையான் சில தவறிற் குற்றப்படுதலின், அவையெல்லாவற்றின் பயனையும் தானே தரவற்றாய இதனையே மேற்கொண்டு தவறாமற்செய்தல் நன்றென்பார், செய்யாமை செய்யாமை நன்றென்றார். இதனை இவ்வாறன்றிப் பொய்யாமையைப் பொய்யாமற் செய்யிற் பிறவறம் செய்கை நன்றெனப் பொழிப்பாக்கிப் பொய்கூறிற் பிறவறம் செய்கை நன்றாகாதென்பது அதனாற்போந்த பொருளாக்கி உரைப்பாருமுளர்,' என்று கூறலும்,

*''சான்றவர் சான்றாண்மை குன்றி னிருநிலந்தான்*
*தாங்காது மன்னோ பொறை''* (990)

என்ற குறட்கும், 'அவர்க்கு அது குன்றாமையும் அதற்கு அது தாங்கலும் இயல்பாகலான் அவை எஞ்ஞான்றுமுளவாகா என்பது தோன்ற நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது' என்று தன்உரை சுட்டி, இதற்கு இருநிலம் பொறைதாங்குவது சான்றவர் துணையாக வருதலான், அதுவும் அது தாங்கலாற்றாது என்றுரைப்பாருமுளர்.' என்று கூறிச்செல்லலும், பொருந்துமிடங்களிலெல்லாம் பிறர் உரைகளைக் கரவாது காட்டிச்செல்லும் அவரது இன்னீர்மைப் பண்பு தெளித்து நிற்கின்றன.

பிறர் உரைகளைப் பொருந்துமிடங்களிலெல்லாம் தழீஇச் செல்லும் இவர், அவை பொருந்திவாரா இடங்களிற் காரணம் காட்டி மறுத்துரைக்கும் அறிஞராகவும் திகழ்கின்றார். அவர் மறுப்புரைகளிலெல்லாம் இன்னுரை வழங்கக் காண்கின்றோமன்றி இற்றைநாள் மறுப்பென்னும் பெயரோடு வெளிப்போந்துலவும் கொடுஞ்சொற் குவியல்போல ஒரு சொற்றானும் சோர்ந்தும் வழங்கக் காண்கின்றோமல்லம். **அவ்வுரைமறுப்புக்கள்** சிலகாட்டிச் செல்கின்றேன்.

*"புறத்துறுப் பெல்லா மெவன்செய்யும் யாக்கை*
*அகத்துறுப் பன்பி லவர்க்கு"*

என்ற குறளடியில், 'புறத்துறுப்பாவன :—இடனும், பொருளும், ஏவல்செய்வாரும் முதலாயின. துணையொடு கூடாதவழி அவற்றாற் பயனின்மையின், 'எவன்செய்யு'மென்றார்; உறுப்புப் போறலின், 'உறுப்'பெனப்பட்டன. யாக்கையிற் கண்முதலிய உறுப்புக்களெல்லாம் என்னபயனைச் செய்யும், மனத்தின்கணுறுப்பாகிய அன்பிலாதார்க்கு என்றுரைப்பாருமுளர். அதற்கு இல்லறத்தோடு யாதுமியைபில்லாமை யறிக.' என மறுத்தலும்,

*"மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோடு*
*இயைந்துகண் ணோடா தவர்"*

'மரமுங் கண்ணோடியைந்து கண்ணோடாமையின், இது தொழிலுவமம். இதனைச் சுதைமண்ணோடுகூடிய மரப்பாவையென்றுரைப்பாருமுளர். அஃது உரையன்மை காணப்படுங் கண்ணோனன்றி அதனுண்மறைந்து நிற்கின்ற ஒரு சாருள்ளீட்டாற் கூறினமையானும், "மரக்கண்ணோ மண்ணாள்வார் கண்ணென்றிரக் கண்டாய்" என்பதனானுமறிக' எனப்பொருள் மாறுபடுமாறு காட்டிமறுத்தலும், அதனைநிறுவ மேற்கோள் காட்டலும்,

*"கருமத்தா னாணுதல் நாணுத் திருநுதல்*
*நல்லவர் நாணுப் பிற"*

என்ற குறட்கு விளக்கம் கூறுமிடத்து, ''பிற குலமகளிர் நாண் என்றதனால் ஏனையது நன்மக்கள் நாண் என்பதும், 'நாணுதல்' என்றதனாற் கருமத்ததிழிவும் பெற்றாம். 'திருநுதல் நல்லவர்' என்பது புகழ்ச்சிக் குறிப்பு. ஏதுப்பன்மை பற்றிப் (மனமொழி மெய்களது ஒடுக்கம்)'பிற' என்றார். இனி அற்றமறைத்தல் முதலியன பொதுமகளிர் நாணொடொக்குமென் றுரைப்பாருமுளர்; அவர்க்கு நாண் கேடுபயக்குமென விலக்கப் பட்டமையானும், அவர் பெயராற் கூறப்படாமையானும் அஃது உரையன்மை யறிக. இதனான் நாணினது இலக்கணம் கூறப்பட்டது.'' என மறுத்துரைத்தலும் பிறருரை ஏதுவால் திரிவுகாட்டி மறுக்கும் உரைநலப்பண்பாம்.

**4. அணிநலம் காட்டல்:—**

'என்பிலதனை...'(77) என்னும் குறளகத்தமைந்த உவமை விளக்கம் முன்னரே காட்டப்பட்டது. அதன்கணமைந்த விளக்கமும், ''அதனைக் காயுமென வெயிலறங்களின் மேலேற்றினார், அவற்றிற்கும் அவ்வியல்புண்மையின்'' என எழுதிய நுணுக்கமும் பயின்று மகிழ்தற்குரியன. இங்ஙனம் விரிவாய் விளக்கிச் செல்லுதலேயன்றிச் சுருக்கி ஒரு சொல்லாலும் சில சொல்லாலும் உவமையணியின் பொதுத்தன்மை விளக்கலும் அவரது இயல்புகளுள் ஒன்று ஆம்,

> *''அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்*
> *வற்றல் மரந்தளிர்த் தற்று''*

என்ற குறளில், 'கூடாது' என்பதாம் என்றும், ''ஊருணி நீர் நிறைந் தற்றே உலகவாம் பேரறி வாளன் திரு''–என்ற செய்யுட்கண், ''பாழ்போகாது நெடிது நின்று எல்லார்க்கும் வேண்டுவன தப்பாதுதவும்'' எனச் செறித்தினிது விளக்கலும்,

> *''அன்புநா ணொப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ*
> *டைந்துசால் பூன்றிய தூண்''*

என்னும் குறட்கணமைந்த ஏகதேச உருவகத்தை, ''இக்குணங்கள் இல்வழிச் சால்பு நிலைபெறாமையின், இவற்றைத் 'தூ'ணென்றார்'' என்று விளக்கலும்,

> *''கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை*
> *சொல்லா நலத்தது சால்பு''*

என்பதன்கீழ்த் ''தவத்திற்குக் கொல்லா அறஞ் சிறந்தாற்போலச் சால்பிற்குப் பிறர்குற்றம் சொல்லாக்குணம் சிறந்ததுஎன்பதாம்''

என எடுத்துக்காட்டுவமையை விளக்கலும், 'நுனிக்கொம்பர் ஏறினார் ........'(476)என்னும் குறட்கண், "பகைமேற் செல்வான் தொடங்கித் தன்னாற் செல்லலாமளவும் சென்று நின்றான், பின் அவ்வளவில் நில்லாது மனஎழுச்சியால் மேலும் செல்லுமாயின் அவ்வெழுச்சி வினைமுடிவிற்கு ஏதுவாகாது அவனுயிர் முடிவிற்கு ஏதுவாம் என்னும் பொருள்தோன்ற நின்றமையின், இதுவும் பிறிதுமொழிதல் என்னும் அலங்காரம்" என எழுதலும், அணிநலம் அவர் உரையில் மிளிர்தற்கு உறுசான்றுகளாம். பிறண்டும் இவைபோல்வன காண்க.

**5. உரையிடைக் காட்டும் 'தன் உவமைகள்':—**

குறட்குத்தாம் உரைத்துச்செல்லும் பொருட்பயனைப் பயில்வாருளத்து நிறுத்து முகத்தான் எடுத்தாளும் சான்றுகள் பொருள்வளமும் செறிவும் இனிமையும் பொதுள அமைந்த மெய்ம்மொழிகளாகத் திகழ்தலைப் பின்வரும் சிற்சிலகொண்டு அறிதல் ஒல்லும்.

**'கண்ணோட்டம்'** என்னுமதிகாரத்து(571) முதற் குறளில்(கண்ணோட்டம்)இன்மை வெருவந்தசெய்தலாகலின்," அவர் நாட்டுவாழ்வார் புலியையடைந்த புல்வாயினம்போன்று ஏமம் சாராமைபற்றி" இவ்வுல குண்டென்றார். என்பது வெருவந்த செய்தொழுகும் வெங்கோலன் கீழ்வாழ்வார் நெஞ்சம் அஞ்சித் துளங்கிக் காவலும் இன்பமுமற்று அழிந்தொழிபவராதலின், அவர்தம் இயல்பை நன்கு தெளித்து நிற்கின்றது.

**'மெய்யுணர்த'** லென்றவதிகாரத்து,

*"சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்*
*சார்தரா சார்தரு நோய்"* (359)

என்ற குறளகத்துப் பொருள் விளக்குமிடத்து...... "சாரக்கடவனவாய் நின்ற துன்பங்களாவன பிறப்பு அநாதியாய் வருதலின் உயிரான் அளவின்றி ஈட்டப்பட்ட வினைகளின் பயன்களுள் இறந்த உடம்புகளான் அனுபவித்தனவும் பிறந்த உடம்பான் முகந்து நின்றனவும் ஒழியப் பின்னுமனுபவிக்கக் கடவனவாய்க் கிடந்தன. அவை விளக்கின்முன் இருள்போல் ஞானயோகங்களின்முன்னர்க் கெடுதலான், 'அழித்துச் சார்தரா' என்றார்." என்பதும், அவ்வதிகாரத்து அடுத்த குறளில், 'காமம்......'(360) "அநாதியாய அவ்விச்சையும்,அதுபற்றி யானெனமதிக்கும் அகங்காரமும், அதுபற்றி எனக்கு இதுவேண்டுமென்னும் அவாவும், அதுபற்றி அப்பொருட்கண்செல்லும் ஆசையும், அதுபற்றி அதன்மறுதலைக்கண் செல்லுங்கோபமுமென வடநூலார் குற்றம் ஐந்தென்றார். இவர் அவற்றுள் அகங்காரம் அவிச்சைக்கண்ணும் அவாவுதல் ஆசைக்கண்ணும் அடங்குதலான், மூன்றென்றார்.

இடையறாத ஞானயோகங்களின் முன்னர் இக்குற்றங்கள் மூன்றும் "காட்டுத்தீ முன்னர்ப் பஞ்சுத்துய் போலுமாகலின், அம் மிகுதிதோன்ற 'இவைமூன்றனுமெங்கெட என்றார்." என்பதும் அச்சிற்சில எடுத்துக்காட்டுகளாம். "கரும்பு அயிறற்குக்கூலி" (399) "மழைத்துளிபோல வந்தீண்டி"(416) "குதிரையை நில மறிந்து செலுத்தும் வாதுவன்போல வேறுக்கி மனத்தைப் புல மறிந்து செலுத்துவது அறிவென்றார் அஃது உயிர்க்குணமாக லின்"(422) என்பனவும் அவை.

6. பாடபேதம் காட்டல்:—

தம்காலத்துத் தாம் உரைஎழுதும் பாடமன்றி வேறு பாடம் காணின் அதனைக்கரவாது காட்டிச்செல்லும் இயல்பின ராவர். 'ஊனுடையெச்சம்......' (1012) 'ஊனைக்குறித்த......' (1013) என்ற இருகுறளுக்கும் முறையே, 'அச்சமென்றுபாட மும், ஊணைக்குறித்த என்றுபாடமும் ஓதுவாரும் உளர்' எனக் காட்டிச் செல்லுமாறு அவ்வியல்புக்கு உறுசான்றாயமையும்.

7. குறளிற் கூர்ந்தறிவன தாம் கொண்டு கூறல்:—

*"அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்(கு)*
*என்புதோல் போர்த்த உடம்பு"*

'அன்புமுதலாக அதன்வழிநின்ற உடம்பே உயிர்நின்ற உடம்பா வது; அவ்வன்பில்லாதார்க்கு உளவான உடம்புகள் என்பினைத் தோலாற் போர்த்தனவாம்: உயிர்நின்ற உடம்பாகா.' என்னும் உரையின்கீழ் "இல்லறம் பயவாமையின் அன்னவாயின" என்று எழுதியிருப்பதன் நுட்பம் கூர்ந்தறிதல் வேண்டும்.

*"ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்*
*செத்தாருள் வைக்கப் படும்"*

என்றசெய்யுட்கு விளக்கம்காண்மின்."உயிரின் அறிவும்செயலும் காணமையின், 'செத்தாருள் வைக்கப்படு'மென்றார். இதனால் உலகநடைவழு வேதநடைவழுப்போலத் தீர்திறன் உடைத்தன் றென்பது கூறப்பட்டது," என்றது அவ்விளக்கம். "நயனுடை யான்........."(219) என்ற குறளின் பொருட்பயனைத் "தான் நுகர்வன நுகரப்பெறாமை யன்றென்பதாம்,"என்பதும்,"மனத் தொடு வாய்மை......" (295) என்னும் குறட்குப் பொருளின் சிறப்பாய்ப்"புறமாகிய மெய்யாற் செய்யுமவற்றினும் அகமாகிய மனமொழிகளாற் செய்யுமது பயனுடைத் தென்பதாம்" என்பதும்,

"நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு"

"அறிவுடையார் நட்புக்கள் பிறைநிறையுந்தன்மைபோல நாடோறும் நிறையுந்தன்மையவாம்; மற்றைப் பேதைமையுடையார் நட்புக்கள் நிறைந்தமதி பின் குறையுந்தன்மைபோல நாடோறும் குறையும் தன்மையவாம்." ஈண்டு உரைத்த இப்பொருளோ, அன்றிக்குறித்த குறளோ பெருகற்கும் சுருங்கற்கும் காரணம் காட்டிற்றில. காரணமோ எளிதின் நினைந்தறியுமாறில்லை. பரிமேலழகியார் கூறும் காரணங்காண்மின்; அஃது அறிந்திலமேல் குறளறிந்தும் பயன் பெறாதவராவோம், அக்காரணம், "அறிவுடையாரும் அறிவுடையாரும் செய்தன முன் சுருங்கிப் பின் பெருகற்கும், பேதையாரும் பேதையாரும் செய்தன முன்பெருகிப் பின் சுருங்கற்கும் காரணம் தம்முள் முன்னறியாமையும் பின்னறிதலுமாம்" என்பது. இப்பகுதியும்,

"நல்லார்கட் பட்ட வறுமையி னின்னாதே
கல்லார்கட் பட்ட திரு"

என்ற குறட்கீழ்த் "தத்தநிலையின் அன்றி மாறிநிற்றலால் தாம் இடுக்கட் படுதலும் உலகிற்குத்துன்பம் செய்தலும் இரண்டற்கு மொக்குமாயினும், திரு கல்லாரைக் கெடுக்க, வறுமை நல்லாரைக் கெடாது நிற்றலால்,வறுமையினும் திரு இன்னாதென்றார்." என்னும் இப்பகுதியும் கூர்ந்தறியும் நலப்பொருளன. இதனைப் போன்றே பிறிதொன்றும் காண்பாம்,

"உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்"

என்ற செய்யுளின் பொருள் விளக்கம், "தாம் நல்வழியொழுகல் பிறர்க்குறுதிகூறல் என்பன இரண்டும் தொழிலென ஒன்றாயடங்குதலின், 'அத்தன்மைத்து' என்றார். 'அத்தன்மை' அப்பயனைத் தரும்தன்மை. நல்லொழுக்கம் காண்டலானும் தமக்கு மதுரமும் உறுதியுமாய கூற்றுக்கள் நிகழ்வு எதிர்வுகளின் இன்பம்பயத்தலானும், கற்றார்மாட்டு எல்லாரும் அன்புடையராவரென்பதாம். இதனாற் கற்றாரது உயர்வு வகுத்துக் கூறப்பட்டது": என்பது. ஈண்டுச் சிலகருத்துக்கள் நினைத்தற்குரியன. புலவர் தொழில் உவத்தலும் உள்ளுதலும் ஆகிய தன்மையை உடையது என்றமையின் தொழில்வேறு தன்மைவேறு ஆம் என்பதனை நன்கறிகின்றோம். செய்யுட்கண் இருதன்மைகளும் சுட்டப்படுகின்றனவேயன்றி அத்தன்மைகளைப் பயக்கும் தொழில்கள் யாவை என்பது காட்டப்படவில்லை. அத்தொழில்களைத் தாம் நல்வழியொழு

கல் பிறர்க்குறுதிகூறல் எனத்தன்மையீனும் காரணங்களாகத் தேர்ந்துதெளிந்து உரைத்தமையும் அத்தொழிலால் அத்தன்மைகள் நிகழ்தற்கு இடையியையபு, நல்லொழுக்கங் காண்டலானும், தமக்கு மதுரமும் உறுதியுமாய கூற்றுக்கள் நிகழ்வு எதிர்வுகளில் இன்பம் பயத்தலானும் கற்றூர்மாட்டு எல்லாரும் அன்புடையராவர்'' என விளக்கியமையும் புலங்கொளற்பால வல்லனவோ?

8. வேண்டாது கூறும் விதப்புக் கிளவி:—

வேண்டாது கூறும் விதப்புச்சொற்கு வேண்டும்பொருள் எழுதிச் செய்யுட்பொருட்களைப் பொலிவுசெய்தல், ''வாயென வேண்டாது கூறினர், தீய சொற்பயிலா என்பதறிவித்தற்கு'' என்று இனியவைகூறலதிகாரத்து முதற்குறட்கண்ணும், ''சொல்லெனவே அமைந்திருக்க வாயென வேண்டாது கூறினர், நல்ல சொற்கள் பயின்றதெனத்தாம் வேண்டியதன் சிறப்பு முடித்தற்கு,'' என்று,

*''ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய*
*வழுக்கியும் வாயாற் சொலல்''*

என்ற குறட்கண்ணும் எழுதுதலான் தெளியப்படும்.

9. முன்னொடுபின் மலையாமை காட்டல்:—

ஆசிரியர் முன்னர் நிறுத்துக்கூறிய கருத்தொடு பின்னர் வகுத்துக்கூறும் கருத்து முரண்படுவனபோல் காணப்படுவனவற்றை அமைத்துப் பொருத்தி முரணுவாறு காட்டும் இயல்புகண்டு மகிழ்தற்குரியதன்றே! இக்காலப் புலவரேல் வள்ளுவரும் முக்குணவயத்தான் முறைமறந்து முன்னொடு பின்மலையக் கூறினரென்று நாக்கூசாது உரைக்கவும் வல்லராவர்.

*''ஒன்ருக நல்லது கொல்லாமை மற்றதன்*
*பின்சாரப் பொய்யாமை நன்று''*

இச்செய்யுளின்கீழ், ''அதிகாரம் கொல்லாமையாயினும், மேற் பொய்யாமை பொய்யாமை ஆற்றின்''(297)எனவும், ''யாமெய்யாக் கண்டவற்றுளில்லை''(300)எனவும் கூறினராகலின், இரண்டறத்துள்ளும் யாது சிறந்ததென்று ஐயம் நிகழுமன்றே; அது நிகழாமைப்பொருட்டு, ஈண்டு 'அதன் பின்சாரப்பொய்யாமை நன்'றென்றார்; முற்கூறியதிற் பிற்கூறியது வலியுடைத்தாகலின். அதனைப்'பின்சார நன்'றென்றது நன்மைபயக்கும்வழிப் பொய்யும் மெய்யாயும், தீமைபயக்கும்வழி மெய்யும் பொய்யாயும் இதனைப்*

* கொல்லாமை.

பற்ற அது திரிந்துவருதலான் என உணர்க,'' என்று ஆசிரியர் மலைவற உரைத்தமை அவர் சொற்கொண்டு விளக்கினர். அன்றியும் 'அதன்பின்சார நன்று' என்று கூறியதன் நுண்பொருளைத் தெளித்து விளக்கிப் 'பிற்கூறியதே வலியுடைத்து,' என்ற உண்மையை நிலைநிறுத்தியமை பயின்று ஓர்ந்து மகிழ்தற்குரித்து.

*''தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்*
*கற்றனைத் தூறு மறிவு''*

என்ற குறட்கீழ், ''இஃது ஊழ்மாறு கொள்ளாவழியாகலின், மேல், 'உண்மையறிவே மிகும்' என்றதனோடு மலையாமையறிக.'' எனக்கூறலும் காண்க.

*''அஞ்சுவ தஞ்சாமை பேதைமை யஞ்சுவ*
*தஞ்ச லறிவார் தொழில்''*

என்றதன் உரையினும், 'அஞ்சாமை இறைமாட்சியாகச் சொல்லப்பட்டமையின் ஈண்டு அஞ்சவேண்டுமிடம் கூறியவாறு,' என்பதூமது.

*''இழத்தொறூஉங் காதலிக்குஞ் சூதேபோற் றுன்ப*
*முழத்தொறூஉங் காதற் றுயிர்''*

என்னுங்குறட்கண், ''உயிரினது அறியாமை கூறுவார்போன்று சூதனது அறியாமைகூறுதல் கருத்தாகலின் அதனை யாப்புறுத்தற்பொருட்டு உவமையாக்கிக் கூறினர்'' என உரைத்தலும், உவமைபொருள் என்பனவற்றின் தடுமாற்ற நிலையால்வரும் மாணவன் உளமலைவு நீக்கினமையின் ஒருபுடை மலைவறுத்துரைத்ததேயாம்.

**10. பரிமேலழகியாரின் பரந்த நூலறிவு:—**

அளவைநூல் ஆரக்கற்றுளார் என்பது பல்வகையான அளவைநூற்பொருள்கொண்டு உரைவகுத்தலான் அறிகின்றேம். அன்பு, ''காட்சியளவைக்கு எய்தாதாயினும் அனுமான வளவையான் வெளிப்படு''மென்பதூஉம்(71)

*''நல்லாற்றா னாடி அருளாள்க பல்லாற்றாற்*
*றேரினு மஃதே துணை''*

என்றதன்கீழ் எழுதிய, ''அளவைகளாவன: பொறிகளாற் காணும் காட்சியும், குறிகளானுய்த்துணரும் அனுமானமும், கருத்தா மொழியாகிய ஆகமமும் எனமூன்று..............''

என்னும் பகுதியும், கண்ணுடையராயின் காட்சிக்கண்ணே அஃ தோடும் என்பதுபற்றிக் கண்ணோட்டமில்லவர் கண்ணில ரெனக்கூறிப்பின் அதனை எதிர்மறைமுகத்தான் விளக்குகின்றார். என்று, "கண்ணோட்டமில்லவர்......"(577) என்ற குறட்கீழ் எழுதுவதும் அவருடைய அளவை நூலறிவுகாட்டுவன; பிறவும் உள. சிறந்த நூல்களிலிருந்து மேற்கோள்காட்டலும்,பழம்பாட லடிகளை உரைநடைக்கண் சுவைபெற அமைத்தெழுதுதலும், அவர்பெற்றுள்ள நூலறிவுடன் நுண்ணிதினமைந்த உய்த்துணர் வையும் தெளிக்கவல்லன. இசைநூல்கள், கூத்துநூல், இலக் கணநூல்கள், கணக்குநூல், மருத்துவநூல், பல்வகையான சமய அறிவுநூல்கள், யோகநுண்ணூல்கள், இதிகாசங்கள், இன்பநூல், பொருணூல், அறநூல், நீதிநூல்போன்ற பலவற்றி னும், வடமொழியினும் பரந்த புலமையுடையார் என்பதும் அவருரை கொண்டறியப்படும்.

**11. உரைநடைப் பெருமை:—**

"இருள்சேரிருவினையும் சேராவிறைவன், பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு," என்ற குறட்கீழ் "இறைமைக்குணங்க ளிலராயினாரை உடையரெனக் கருதி அறிவிலார்கூறுகின்ற புகழ்கள் பொருள்சேரா ஆகலின், அவை முற்றவும் உடைய இறைவன்புகழே பொருள்சேர் புகழெனப்பட்டது;" என எழு துவதும், "துறவறம் மனத்தையும் பொறிகளையும் ஒறுத்தடக்க வல்ல அருமையுடைத்தாயவழியே, அவற்றையொறுக்க வேண் டாது ஐம்புலவின்பங்களாரத் துய்க்கும் எண்மையுடைய இல் வாழ்க்கையோடு அறமென ஒருங்கெண்ணப் படுவதென்றவா றாயிற்று," (49) என எழுதுவதும்.

"தேயம் இடையிட்டவற்றையும் காலம் இடையிட்ட வற்றையும் காணும் ஞானக்கண்ணுடைமையின் கற்றாரைக் 'கண்ணுடைய'ரென்றும், அஃதின்றி நோய்முதலியவற்றான் துன் பஞ்செய்யும் ஊனக்கண்ணே உடைமையிற் கல்லாதவரைப் 'புண்ணுடைய'ரென்றுங் கூறினார்."(393) என எழுதுவதும், "அநாதியாகத் தான் பிறப்புப் பிணி மூப்பிறப்புக்களால் துன்ப முற்று வருகின்றமையை யுணர்ந்தவனுக்கு ஆசை இன்பத்தின் கண்ணேயாகலின் பிறவாமையை'வேண்டு'மென்றும் ஈண்டைச் சிற்றின்பங்கருதி ஒருபொருளையவாவின் அது பிறப்பினும் வித் தாய்ப் பின்னும் முடிவில்லாத துன்பமே விளைத்தலின், அது 'வேண்டாமை வேண்டவரு' மென்றும் கூறினார்"(362) என எழுதுவதும் உரைநடைப் பொலிவு காட்டுவனவாம். "எற்று என்று........"(655) என்ற குறட்கீழ், "அவ்வினைகளது பன் மையான்,இரக்கமும் பலவாயின: அச்செயற்குப் பின்னிருந்திரங்

குவனுயின், அதுதீரும் வாயிலறிந்திலனெனவும், திட்பமிலனெனவும், பயனில்லன செய்கின்றானெனவும், தன்பழியைத்தானே தூற்றுகின்றானெனவும், எல்லாருமிகழ்தலிற் பின்னிரங்காமை நன்றென்றார்,'' என்பதும் உரைநடையழகு தெரிப்பதாயமைந்துளது.

**12. அதிகாரப் பாடலியைபு:—**

அதிகாரத்துள் அமைந்த ஒவ்வொரு பத்துப்பாடலிடையேயும் பொருளியைபு காட்டிச் செல்லுதலும் அவரது உரையியல்புகளில் ஒன்று. தலைப்பினைத் தொகைநிலையிற் கொள்வோமாயின் பரிமேலழகியார் காட்டும் பாடலியைபு வகையாகவும், விரியாகவும் அமையும். பாடலினியைபுகள், ஆசிரியர் பொருள் தெரித்து விளக்கிச் செல்லுதலை வகைப்படுத்தியும், இயைபுபடுத்தியும், காட்டலோடு கருத்தினைத் தொகுத்துரைப்பனவாய் அமைந்துள்ளன. சான்றாக, அன்புடைமை என்ற அதிகாரத்தைக் காண்போம். முதற்குறளால் அன்பினதுண்மை கூறப்பட்டது, பின்னர் அமைந்த ஐந்து பாட்டானும் அன்பினது சிறப்புக் கூறப்பட்டது, பின்னர் அமைந்த இறுதி நான்குபாட்டானும் அன்பில்வழிப்படும் குற்றம்கூறப்பட்டது.என மூவகையால் அதிகாரப்பொருளை அடைவுபடுத்திக் கொண்டுள்ளார். இம்மூவகையடைவும் இயைபுபடுத்தி அறிந்தான் ஒருவன்,தொகுத்துக்கூறிய பாடல்களும் தம்முள் இயைபுகொண்டுள்ளமை எளிதில் அறிய வல்லவனுவான். அன்பின் சிறப்புக்கூறிய ஐந்துபாட்டானும் பல வகையான சிறப்புக்கள் சுட்டப்பட்டன. அச்சிறப்புக்களைத் தொகுத்தவகையான் பரிமேலழகியார் குறித்துச்சென்றா ரென்க. ஒருபொருளின் உண்மையும், சிறப்பும், அஃது இன்மையின் இழிவும் சுட்டியமை அப்பொருளுண்மை யறிந்து பெறுதற்குதவுமாறு அமைந்துளது. தொகுத்துக்கூறிய பாடல்களிலும் ஒவ்வொருபாட்டின்கீழும் பாடற்கருத்துச் சுட்டிச்செல்லுமாறு நுனித்துணர்தற்குரியது.

**13. உரையிடைப்பட்ட இலக்கணக் குறிப்புக்கள்:—**

இலக்கியங்களிடையும் வழக்கிடையும் காணப்படும் மாறாத பொதுவும் சிறப்புமாய ஒழுங்குமுறைகளே இலக்கணம் என எடுத்து வடித்துரைக்கப் படுகின்றன. ஆதலின் அவற்றிடையடங்கிப் பரந்துள்ள பொருளெல்லாம் தெளியக்காண்டற்கு ஒளிவிளக்கமாய் அமைந்தது இலக்கணம் என்றறிதல்வேண்டும். அறியவே, இலக்கண அறிவு நிரம்பப்பெற்றாலன்றி அதன் நெறியானமைந்த இலக்கியப் பொருள் காண்டல் இயலாது என்பது தேற்றமாம். எனவே இலக்கண அறிவு இன்றியே இலக்கியப்

பொருள் காணவல்லோம் என்பதும் கண்டு உரைக்கவல்லோம் என்பதும், உரைத்து எழுதவல்லோம் என்பதும் அரங்கின்றி வட்டாடியது போலவாம். தாம் இலக்கணம் பயிலாமையானும் பயிலும் ஒட்பஅறிவு மதுகை இன்மையானும் இலக்கணமின்றியே இலக்கியங்களிற் பொருள் காண்கின்றேமென்று கூறுவாராயின், உலகவழக்கிடைக்கண்ட சிலபல பொருளறிவுகொண்டு அவரால் கூறப்படுவன அப்பொருள்களாமன்றி, அந்நூல்களினமைந்துள்ள எல்லாப்பொருள்களும் நிரம்பிய அறிவான் அறிந்து கூறப்பட்டனவாகா. அறிந்த சிலபலவும் நூலறிவின்மையின் வழூஉக்களைந்து துடைத்துத்தூய்மையாக்கிக் கொண்டனவல்ல. ஆதலின் அப்பொருள்யாவும் வரைதுறையின்றி வந்தவாறுரைத்துப்போகும் வளம்சான்றவை. இத்துணையும் கூறியவாற்றான் நிரம்பிய இலக்கண அறிவு இலக்கியப் பொருள்காண்டற்கு இன்றியமையாக் கருவி என்பதும், அஃது இன்றிப் பொருள் காண்டலும் காணமுயலலும், ஆடும் நுணுக்கமும் முறையும் அறியாள் ஒருத்தி அரங்கமேறிநின்று ஆடியும் ஆடமுயன்றும் அதன் இயல்பை முன்னிருப்பார் யாவர்க்கும் விளக்கமுறப்பட்டதுபோன்று எள்ளிநகைத்து இகழ்ந்து ஒதுக்கற்பாலவாம் என்பதும் அறியப்படும். இனிப் பரிமேலழகியார் குறளிடைக் காட்டிச் செல்லும் இலக்கணக்குறிப்புக்கள் மிகப்பலவாயினும் அவ் அனைத்தும்கூறாது அவற்றுள் சிலபலகாட்டிச் செல்லுகின்றேன்.

இடைச் சொற்களின் பல்வேறுபொருள் இயம்பலும், சொல்லெச்சம் குறிப்பெச்சம் சுட்டலும், அவாய்நிலையாற் சொற்கொண்டு எழுதலும், ஆகுபெயர் அன்மொழித்தொகைகள் காட்டலும், வேற்றுமைத்தொகை விளக்கலும், வினைமாற்று உரைத்தலும், செய்யுள்விகாரம் செப்பலும், புணர்ச்சி இலக்கணம் புகறலும், சொன்முடிவு சொல்லலும், வாளாபெயராய் நின்றது எனவும் நின்றுவற்றும் எனவும் வரைதலும், உலகவழக்கும், உபசாரமும்,இலக்கணையும் உரைத்தலும், சொல்முடிவு பொருண்முடிபுகளுக்கு இலக்கண மேற்கோள் பொருத்தலும், சாதி ஒருமை சாற்றலும், பெயரிலக்கணம் பொறித்தலும், இவைபோல்வனவும் அவர் உரையிடைக் காணப்படும் இலக்கண நலங்களாம்.

முதற்குறளில் 'ஏகாரம் தேற்றத்தின்கண் வந்தது' என்று கூறிச் செய்யுளின் கருத்துரைக்குமாறு புலத்திருத்தற் குரித்து. ''உலகு என்றது ஈண்டு உயிர்கண்மேல் நின்றது. காணப்பட்ட உலகத்தாற் காணப்படாத கடவுட்கு உண்மைகூற வேண்டுதலின்'ஆதிபகவன் முதற்றே உலகு' என உலகின்மேல் வைத்துக் கூறினர். கூறினரேனும்,உலகிற்கு முதல் ஆதிபகவன் என்பது

கருத்தாகக் கொள்க." இவ்விளக்கம் சற்று ஆழ்ந்தறியுமாறு அமைந்துளது. உலகு வினைமுதலாய் நின்று ஆதிபகவனை முதலாக உடையதாகின்றது. உடைமை இறைவனாகவும் உடைமை கொள்ளும் முதல் உலகமாகவும் அமைந்து, உலகு ஆதிபகவனை முதலாக்கொள்ளாது ஒழியின் அவர்க்கு அம்முதன்மை இல்லாது போகும் இழுக்குநேரும் குறைவுடையதாய் நிகழும் அதனை அங்ஙனம் கூறற்குரிய காரணங்காட்டித் தெளித்து, உலகிற்கு முதல் ஆதிபகவன் என்பது கருத்தாகக் கொள்க என்று உரைத்தல் காண்க.

*"கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே*
*எடுப்பதூஉம் எல்லாம் மழை"*

என்ற குறட்கீழ், 'மற்று' வினைமாற்றின்கண் வந்தது. ஆங்கு என்பது மறுதலைத் தொழிலுவமத்தின்கண் வந்த உவமச் சொல். கேடும் ஆக்கமும் எய்துதற்கு உரியார் மக்களாதலின் கெட்டார்க்கு என்றார். 'எல்லாம்' என்றது அம்மக்கள் முயற்சி வேறுபாடுகளாற் கெடுத்தல் எடுத்தல்கள் தாம் பலவாதல் நோக்கி. 'வல்லது' என்பது, அவாய்நிலையான் வந்தது. "மழையினது ஆற்றல் கூறியவாறு" என எழுதும் பகுதிகள்யாவும் இலக்கணமுறையான் செய்யுட்பொருள் துடைத்துத் தூய்மை செய்து நிற்றலோடு அச்செய்யுள் மழையின் ஆற்றற்கு ஏற்ப 'வல்லது' எனும் சொற்கொண்டு முடிந்தமைதல் பெருங்கவினுடைத்து.

*"நாளென வொன்றுபோற் காட்டி யுயிரீரும்*
*வாள துணர்வார்ப் பெறின்"*

என்னும் செய்யுட்கீழமைந்த குறிப்புக்கள் சில காண்டற்குரியன. 'உயிர்' என்னும் சாதியொருமைப் பெயர் ஈண்டு உடம்பின் மேல் நின்றது, ஈரப்படுவது அதுவேயாகலின். 'வாள்' என்பது ஆகுபெயர். இனி இதனை, நாளென்பது ஒரு பொருள்போலத் தோன்றி உயிரை ஈர்வது ஒரு வாளாம் என்று உரைப்பாருமுளர்; 'என' என்பது பெயரன்றி இடைச்சொல்லாகலானும், ஒன்றுபோற்காட்டி என்பதற்கு ஒரு பொருட் சிறப்பின்மையானும், 'அது'வென்பது குற்றியலுகர மன்மையானும், அஃது உரையன்மை அறிக. இவையாவும் குறட்பொருள் இலக்கண நெறியான் ஆய்ந்து அமைக்கும் அவர் உரையின் நீர்மைகளாமென்க.

"கற்றிலனாயினும் கேட்க"(414) என்னும் குறளகத்து, உம்மை கற்கவேண்டுமென்பதுபட நின்றது. என்பதும்,

*"பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்*
*சால மிகுத்துப் பெயின்"*

என்னும் குறளகத்து, 'உம்மை சாகாட்டது வலிச்சிறப்பேயுமன் றிப் பீலியது நொய்ம்மைச் சிறப்புந் தோன்றநின்றது. 'இறும்' என்னும் சினைவினைமுதல்மேல் நின்றது' என்பதும்,

*"சான்றவர் சான்ருண்மை குன்றி னிருநிலந்தான்*
*தாங்காது மன்னோ பொறை"*

என்பதன்கீழ், 'தானும் என்னும் எச்சவும்மை, விகாரத்தால் தொக்கது. அவர்க்கு அது குன்ருமையும், அதற்கு அது தாங் கலும் இயல்பாகலான், அவை எஞ்ஞான்றும் உளவாகா என்பது தோன்ற நின்றமையின், 'மன்' ஒழியிசைக்கண் வந்தது. 'ஓ'காரம் அசை' என்று கூறலும்,

*"ஒண்ணுதற் கோஒ உடைந்ததே ஞாட்பினுள்*
*நண்ணரும் உட்குமென் பீடு"*

என்ற செயயுட்கண், "மாதர் என்பது அதிகாரத்தான் வந்தது. 'பீ'டென்ற பொதுமையான் மனவலியும் காயவலியும் கொள்க. 'ஓ'வென்னும் வியப்பின்கட் குறிப்பு, அவ்வலிகளது பெருமை யும் நுதலது சிறுமையும் தோன்றநின்றது. கழிந்ததற்கு இரங் கலிற்றற்புகழ்தலன்ருயிற்று" எனக் குறிப்பதும் இலக்கண நலத்திற்குறு சான்றுகளாம். இவரமைக்கும் இலக்கண நுண் மைகளில் சில இவரியற்றிய பரிபாடலுரையும் குறளுரையும் துணைக்கொண்டு எழுதப்பெற்ற நுண்பொருள் மாலையால் விளங்கும். நிற்க,

இத்துணையும் கூறியவாற்ருன், பரிமேலழகியார்தம் குற ளுரையின் மாண்பு ஒருவாறு புலப்படுத்தப் பட்டதாம். குறட்கு அமைந்த அவர் உரை, அவர் வாழ்ந்த கால இயல்புக்கு ஏற்ப அமைந்தமையின் சிற்சில கருத்தமைதிகளின் பொருந் தாமை கொண்டுளமைபற்றித் தீண்டாமல் வெறுத்தொதுக் குதற்குரியதன்று, பலவகையானும் ஆய்ந்து கூர்ந்து பயிலுதற் குரியதே ஆம் என்பது அவ்வுரைமுழுதும் முறையாக ஒருகால் கற்கும் அளவானே தெளியப்பெறுமென்க.

தமிழகத் தனித்தவமகன் அறிவுக்கடல் **மறைமலை அடிகளார்** பண்டைக்காலத்து உரையாசிரியர்களைப் பரவிப் பேணிக்கொள்ளும் திறம் காண்க.

"....நச்சினார்க்கினிய ருரைகூறுவிடின் இப்பத்துப் பாட்டுக்களின் பொருள் விளங்குதலரிதேயாதல் பற்றியும் இவர் தொல்காப்பியம், கலித்தொகை முதலிய பண்டைச் செந்தமிழ் நூல்கட்கு அரிய பெரிய தண்டமிழ் உரை வகுத்தது பற்றியும் இவரை நெஞ்சார வழுத்தி இவர்க்குத் தொண்டு பூண்டொழுகுங் கடப்பாடு மிகவுடையேமாயினும், இவர் வழுவியவிடங்களிலும் இவரைப்பின்பற்றி உலகை ஏமாற்றுதல் நடுவுநிலை யாகாதாகலின் இவர் வழூஉக்களைந்து திருத்திப் பின் இவரைச் செந்தமிழ் மாமுகில் வள்ளலாய்க் கொண்டு வழிபடுவாமென்க."

(பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை-87.)

---

## எவ்வகையான மேம்பாடுடையாரிடத்தும் மறுத்தற்குரிய கருத்துடைக் கொள்கைகள் நிலவுதல் உண்டு.

பாயிரவிருத்தியுள் அரசஞ்சண்முகனரால் மறுக்கப்பட்ட கொள்கையுடையோர் பெயரும் அவரது நூலுரைகளின் பெயரும் மறுக்கப்பட்ட கொள்கையின் தொகையும்.

| பெயர். | | கொள்கையின் தொகை. |
|---|---|---|
| இலக்கணக் கொத்து நூலார் | ... | 2 |
| இலக்கண விளக்கச் சூறாவளி | ... | 2 |
| இலக்கண விளக்க நூலார் | ... | 9 |
| இளம்பூரணர் | ... | 4 |
| சங்கர நமச்சிவாயப் புலவர் உரை | ... | 2 |
| சிவஞான முனிவர் | ... | 32 |
| சேனாவரையர் | ... | 3 |
| நச்சினார்க்கினியர் | ... | 4 |
| நன்னூலார் | ... | 15 |
| பரிமேலழகர் | ... | 2 |
| பிரயோக விவேக நூலார் | ... | 15 |
| பெயர் குறியாதவர் | ... | 15 |
| வீரசோழிய நூலார் | ... | 1 |

"வள்ளுவர்நூல் அன்பர்மொழி
வாசகம்தொல் காப்பியமே

தெள்ளுபரி மேலழகர்
செய்தவுரை — ஒள்ளியசீர்த்

தொண்டர் புராணம்
தொகுசித்தி ஓராறும்

தண்டமிழின் மேலாந்
தரம்"

—உமாபதிசிவனார்.

❊

ஓதற் கெளிதாய் உணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கித் தீதற்றோர்
உள்ளுதொ றுள்ளுதொ றுள்ள முருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு.

—மாங்குடி மருதனார்.

❊

புலவர் திருவள் ளுவரன்றிப் பூமேற்
சிலவர் புலவரெனச் செப்பல் — நிலவு
பிறங்கொளிமா லைக்கும் பெயர்மாலை மற்றுங்
கறங்கிருண்மா லைக்கும் பெயர்.

—மதுரைத் தமிழாசிரியர் செங்குன்றூர் கிழார்.

❊

ஆவனவும் ஆகா தனவும் அறிவுடையார்
யாவரும் வல்லா ரெடுத்தியம்பத் — தேவர்
திருவள் ளுவர்தாமுஞ் செப்பியவே செய்வார்
பொருவி லொழுக்கம் பூண்டார்.

—செயிர்க்காவிரியார் மகனார் சாத்தனார்.

❊

சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய
வந்த இருவினைக்கு மாமருந்து — முந்திய
நன்னெறி நாமறிய நாப்புலமை வள்ளுவனார்
பன்னிய இன்குறள்வெண் பா.

—கவுணியனார்.

❋

| ஆசிரியர் திருப் பெயர்கள் - ௯. | நூலின் திருப் பெயர்கள் - ௯. |
|---|---|
| திருவள்ளுவர் | திருக்குறள் |
| நாயனார் | முப்பானூல் |
| தேவர் | உத்தர வேதம் |
| முதற் பாவலர் | தெய்வ நூல் |
| தெய்வப் புலவர் | திருவள்ளுவர் |
| நான்முகனார் | பொய்யாமொழி |
| மாதாநுபங்கி | வாயுறை வாழ்த்து |
| செந்நாப் போதார் | தமிழ் மறை |
| பெரு நாவலர் | பொது மறை |

திருச்சிற்றம்பலம்.



கலைக்கதிர் அச்சகம், கோயமுத்தூர்.

❋

ஏழைத் தொழும்பனேன்
எத்தனையோ காலமெல்லாம்
பாழுக் கிறைத்தேன்
பரம்பரனைப் பணியாதே
ஊழிமுதற் சிந்தாத
நன்மணிவந் தென்பிறவித்
தாழைப் பறித்தவா
தோணுக்கம் ஆடாமோ.

— திருவாசகம்.

❋

கலைக்கதிர் அச்சகம்,
அவனுசி ரோடு,
பா. பாளையம், கோவை.